
தினபூமி
thinaboomi.com
பூமி: 26 சுற்று: 19 ஆனி 16
Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003
சேலம், திங்கள், ஜூன் 30, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்தம்: அமெரிக்க அதிபர் மீண்டும் வலியுறுத்தல்

...2-ம் பக்கம்

## எமர்ஜென்சியை எதிர்த்து போராடியவர்களை நினைவில் கொள்ள வேண்டும்: பிரதமர்

...3-ம் பக்கம்

## டி-20 போட்டிகளில் அதிக வெற்றி: ஆஸ்திரேலிய அணியின் சாதனையை சமன் செய்த இந்திய மகளிர் அணி!

...6-ம் பக்கம்





● மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று மாலை முழு கொள்ளளவான 120 அடியை எட்டியது. இதனையடுத்து அணையில் இருந்து வினாடிக்கு 58 ஆயிரம் கன அடி உபரி நீர் 16 கண் மதகுகள் வழியாக வெளியேறிய காட்சி.

### 3-டி முறையில் தமிழர் முகங்கள் வடிவமைப்பு: சங்க இலக்கிய வாழ்வியல் எல்லாம் தற்போது

# அறிவியல்வழி நிறுவப்பட்ட சான்றாக கீழடி உள்ளது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஜூன் 30-

**கீழடியில் கிடைத்த மண்டை ஓடுகளை வைத்து இங்கிலாந்தில் உள்ள ஆய்வகத்தில் 3டி முறையில் தமிழர் முகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் பக்கத்தில் பெருமிதம் தெரிவித்துள்ளார். அதில் சங்க இலக்கிய வாழ்வியல் எல்லாம் தற்போது அறிவியல்வழி நிறுவப்பட்ட சான்றாகக் கீழடி உள்ளதாக தெரிவித்துள்ளார்.**

**அகழாய்வில் கிடைத்த...**

மதுரைக்கு அருகே வைகை நதிக்கரையில் கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்த மண்டை ஓடுகளை வைத்து, 2,500 ஆண்டுகளுக்குமுன் (கி.மு. ஆறாம் நூற்றாண்டு) வாழ்ந்த தமிழர் முகங்களின் மாதிரிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்தில் உள்ள ஆய்வகத்தில் 3டி முறையில் 80 சதவிகித அறிவியல், 20 சதவிகித அளவிலான கலையைப் பயன்படுத்தி, முகத்தின் மாதிரிகள் வடிவமைக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், டிஎன்ஏ-வையும் பகுப்பாய்வு செய்து, இவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பதை அறியவும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.



**வைகை நதிக்கரையில்..**

இந்த நிலையில், அகழாய்வின் மூலம் பெறப்பட்ட முக மாதிரிகளைக் குறிப்பிட்ட முதல்வர் மு.க. ஸ்டாலின், ``சங்க இலக்கியம் சொற்களால் வடித்த வாழ்வியல் எல்லாம் அறிவியல்வழி நிறுவப்பட்ட சான்றாகக் கீழடியில்'' என்று பதிவிட்டுள்ளார்.

கடந்த 2014-ம் ஆண்டு இந்தியத் தொல்லியல் துறை மதுரைக்கு அருகே வைகை நதிக்கரையில் கீழடி எனும் இடத்தில் அகழாய்வை மேற்கொண்டது.

இந்த அகழாய்வில் 5,300-க்கும் மேற்பட்ட தொல் பொருள்கள் கிடைத்ததுடன், ஒரு நகர அமைப்புக்கான சான்றுகளும் கிடைத்தன. அந்தப் பொருள்களை சோதனை செய்தபோது அவை 2,800 ஆண்டுகள் வரை பழைமையானவை என்று தெரிய வந்தது.

**10 கட்ட அகழாய்வு...**


ஆனால் இந்த அகழாய்வின் முதல் இரண்டு கட்டம் நடைபெற்ற அகழாய்வுகள் மற்றும் அதன் அறிக்கை ஆகியவை வெளியிடப்படும் முன்பே அந்த ஆய்வை மேற்கொண்ட அமர்நாத் ராமகிருஷ்ணன் அப்பணியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டு, அந்த அகழாய்வுப் பணிகளை தொல்லியல்துறை முடித்துக் கொண்டது. அதன் பின் தற்போதுவரை 10 கட்ட அகழாய்வுப் பணிகளை தமிழகத் தொல்லியல் துறை நடத்தியுள்ளது. அதில் கிடைத்த ஆயிரக்கணக்கான பழம்பொருள்களைக் கொண்டு அருங்காட்சியகம் வைக்கும் அளவுக்கு தொல் பொருள்கள் கிடைத்துள்ளன. தமிழகத் தொல்லியல் துறை அறிக்கைகள், ஒவ்வோர் ஆய்வின் முடிவிலும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது.

**பல்வேறு தரப்பினர்....**

ஆனால் 2014-ல் செய்யப்பட்ட முதல் மற்றும் இரண்டாம் கட்ட அகழாய்வுப் பணிகளின் அறிக்கை இதுவரை வெளியிடவில்லை.

மேலும், அமர்நாத் ராமகிருஷ்ணாவிடம் இந்திய தொல்லியல் துறை அந்த அறிக்கையை மீண்டும் திருத்தி எழுதிச் சமர்ப்பிக்குமாறு கடிதம் அனுப்பியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, தமிழர் நாகரிகம் குறித்த முக்கியத்துவம் வாய்ந்த கீழடி அறிக்கையை மத்திய அரசு உடனே வெளியிட வேண்டும் என்கிற கோரிக்கையை பல்வேறு தரப்பினர் எழுப்பி வருகின்றனர்.



பிரிட்டனில் உள்ள ஆய்வகத்தில் கீழடியில் கிடைத்த மண்டை ஓடுகளை வைத்து 2,500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் முகங்கள் 3டி முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட

# 8 தமிழக மீனவர்களையும் உடனே மீட்க வேண்டும்

## மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜூன் 30-

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 8 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வரவும், மீனவர்கள் பிரச்சினைகளைக் கையாள்வதில், இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.**

இது குறித்து எழுதப்பட்டிருக்கும் அறிக்கையில், "இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 8 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதை உறுதி செய்யவும், மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதில், கட்டுப்பாடு மற்றும் பரஸ்பர புரிதலை உறுதி செய்வதற்கு இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு, தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று (29.06.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பையும் கடுமையாக பாதிக்கும் இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கை குறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் கவனத்தை ஈர்த்துள்ள முதல்வர், 29.06.2025 அன்று இலங்கை கடற்படையினர் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 08 மீனவர்களுடன், IND-TN-10-MM-773 பதிவு எண் கொண்ட அவர்களது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகையும் சிறை பிடித்துள்ளதாக வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய கைது நடவடிக்கைகள், படகுகள் மற்றும் உபகரணங்கள் இழப்பிற்கும், நீண்டகால சிறை பிடிப்பிற்கும் வழிவகுப்பதோடு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்துகிறது. எனவே கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது படகையும் பாதுகாப்பாக மீட்டுக் கொண்டு வருவதை உறுதி செய்ய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் உடனடியாக தலையிட வேண்டும்.

வருடாந்திர மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்து, மீன்பிடிப் பருவம் மீண்டும் தொடங்கியுள்ள நிலையில், நமது மீனவர்கள் வாழ்வாதாரம் ஈட்டும் நம்பிக்கையுடன் மீன்பிடிக்க கடலுக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதில், கட்டுப்பாடு மற்றும் பரஸ்பர புரிதலை உறுதி செய்ய இலங்கை அதிகாரிகளுடன் உரிய தூதரக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# புரி ரத யாத்திரையில் 3 பக்தர்கள் பலி

புவனேஸ்வர், ஜூன் 30-

**புரி ஜெகநாதர் கோவில் ரத யாத்திரையில் 3 பக்தர்கள் பலியான சம்பவத்திற்கு ஒடிசா முதல்வர் மாஞ்சி மன்னிப்பு கோரியுள்ளார்.**



புரி ஜெகநாதர் கோயில் ரத யாத்திரையில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்தவரை மீட்டுச்செல்லும் காட்சி.

புரி ஜெகநாதர் கோவில் ரத யாத்திரை நிகழ்வில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 3 பேர் பலியாகினர். சுமார் 50 பேர் காயமடைந்தனர். ஸ்ரீ குந்திச்சா கோவில் அருகே நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 4.30 மணியளவில் இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இது குறித்து புரி மாவட்ட ஆட்சியர் சித்தார்த் எஸ் ஸ்வெயின் கூறுகையில், "ரத யாத்திரையை ஒட்டி அதிகாலை 4 முதல் 4.30 மணிக்குள் ஸ்ரீ குந்திச்சா கோவில் அருகே, கூட்டம் குவிந்தது. எதிர்பாராத வகையில் கூட்டம் திரண்டதால் நெரிசலில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்கள் ப்ரவிதா தாஸ் (52), பிரேம் கந்தா (52), பசந்தி சாஹு (42) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நெரிசல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. கூட்ட மேலாண்மையில் ஏதேனும் குறைபாடு இருந்ததா என்ற கோணத்தில் விசாரணை நடக்கிறது.'' என்றார்.

மன்னிப்பு கோரிய முதல்வர்: இந்த விபத்து குறித்து ஒடிசா முதல்வர் சரண் மாஞ்சி வெளியிட்ட இரங்கல் செய்தியில், "பக்தர்கள் மத்தியில் மஹாபிரபுவையும், சாரதாபாலியையும் காண வேண்டி ஏற்பட்ட அதீத ஆர்வத்தால், துரதிர்ஷ்டவசமாக கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த விஷயத்துக்காக நானும், எனது அரசாங்கமும் ஜெகநாதர் பக்தர்களிடம் மன்னிப்பு கோருகிறோம்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

### தற்கொலைப்படை தாக்குதல்:

# பாக். குற்றச்சாட்டுக்கு மத்திய அரசு எதிர்ப்பு

புதுடெல்லி, ஜூன் 30-

**பாகிஸ்தானில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலுக்கு இந்தியாவே காரணம் என்ற பாகிஸ்தானின் குற்றச்சாட்டை மத்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.**

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், "பாகிஸ்தான் ராணுவத்தின் அதிகாரபூர்வமான அறிக்கையை பார்த்தோம். அதில் ஜூன்28-ல் நடந்த வஜீரிஸ்தான் தாக்குதலுக்கு இந்தியாவை குற்றம் சாட்டி உள்ளது. இந்தியா இந்தக் குற்றச்சாட்டை முற்றிலும் நிராகரிக்கிறது. அதோடு கண்டனமும் தெரிவிக்கிறது'' எனக் கூறப்பட்டுள்ளது.

ஆப்கனிஸ்தானில் தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த 2021 முதல் பாகிஸ்தானில் தலிபான்களின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. பாகிஸ்தான் தாலிபான் என்ற தனி அமைப்பு இந்த தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், ஆப்கனிஸ்தானை ஒட்டிய கைபர் பக்துன்வா மாகாணத்தின் வடக்கு வஜீரிஸ்தான் மாவட்டத்தில் ராணுவ வாகனங்கள் மீது வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை தற்கொலைப் படைத் தீவிரவாதி மோதியதில், ராணுவ வீரர்கள் 16 பேர் கொல்லப்பட்டனர். மேலும், பொதுமக்கள், உள்ளூர் அரசாங்க அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் உள்பட 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு ஹபிஸ் குல் பகதூர் குழு பொறுப்பேற்றுள்ள நிலையில் அதன் பின்னணியில் இந்தியா இருப்பதாக பாகிஸ்தான் ராணுவம் பரபரப்பான குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வீடுகளுக்கான அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும்

## தமிழ்நாடு அரசு மீண்டும் திட்டவட்டம்

சென்னை, ஜூன் 30-

**வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை, அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும் என போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், சமூக வலைதளங்களிலும், சில செய்தி ஊடகங்களிலும் மின் கட்டணம் உயர்த்தப்பட உள்ளதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் பரவி வந்த நிலையில், அது தொடர்பாக, ஏற்கெனவே 20.05.2025 அன்று வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை என விரிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

எனினும், தற்போது மீண்டும் மின் கட்டணம் குறித்த வதந்திகள் தொடர்ந்து பரவி வருவதால், இதுகுறித்து மீண்டும் அரசின் சார்பில் தெளிவுபடுத்தப்படுகிறது. தற்சமயம், மின் கட்டண உயர்வு குறித்து எவ்வித ஆணையும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் வெளியிடப்படவில்லை.

முதல்வரின் வழிகாட்டுதலின்படி, ஒழுங்குமுறை ஆணையம் மின்கட்டணம் தொடர்பாக ஏதேனும் ஆணை வழங்கினாலும், அதனை நடைமுறைப்படுத்தும்போது வீட்டு மின் நுகர்வோர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம், எந்தவொரு மின் கட்டண உயர்வும் இருக்காது எனவும், தற்போது வழங்கப்படும் 100 யூனிட் இலவச மின்சாரம் உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் தொடர்ந்து வழங்கப்படும் எனவும் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். எனவே, மின் கட்டண உயர்வு குறித்த தேவையற்ற வதந்திகளைப் பொதுமக்கள் நம்ப வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### மகளிர் உரிமைத்தொகை பெற

# மேலும் 3 தளர்வுகளை அறிவித்தது அரசு

**சென்னை, ஜூன் 30-**

**மகளிர்உரிமைத்தொகைபெறமேலும் மூன்று தளர்வுகளை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

**தமிழகத்தில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் கடந்த 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ந்தேதி அண்ணாபிறந்தநாளில்முதல்வர்மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

**தற்போதைய நிலையில் சுமார் 1 கோடியே 14 லட்சம் பெண்கள் மாதந்தோறும் கலைஞர் உரிமைத்தொகை பெற்று வருகின்றனர்.**


**விடுபட்ட பெண்களுக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என கடந்த சட்டசபை கூட்டத் தொடரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.**

**இந்நிலையில், மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்காக மேலும் 3 தளர்வுகளை தமிழக அரசு அறிவித்து, அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளுடன் அரசாணை வெளியிட்டுள்ளது.**

**அதன்படி, காலமுறை ஊதியம் பெற்று, தற்போது ஓய்வூதியம் பெறுவோர் குடும்பங்களில் பெண்கள் விண்ணப்பிக்கலாம். அரசுத்துறைகளில்மானியம் பெற்று 4 சக்கர வாகனம் வைத்திருப்போர்குடும்பங்களைச்சேர்ந்தபெண்களும் தகுதியானவர்கள்.**

**விதவை ஓய்வூதியம் பெறுவோர் குடும்பங்களில் ஓய்வூதியதாரர் அல்லாத பெண்களும் விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துள்ளது.**

**மார்க்கெட் விலை நிலவரம்**



**BSE** ↑ 303.03 பாயின்ட் 84,058.90

**NSE** ↑ 88.80 பாயின்ட் 25,637.80



**தங்கம்** 1 சவரன் ₹71,440 — 1 கிராம் ₹8,930



**வெள்ளி** 1 கிலோ ₹119,000 — 1 கிராம் ₹119.00



**டாலர்** ₹85.49



**பெட்ரோல்** ₹102.63 — **டீசல்** ₹94.24

## இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்தம்:
# அதிபர் ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தல்

**வாஷிங்டன், ஜூன் 30-**

இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காண வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வரும் வாரங்களில் வாஷிங்டன் செல்ல திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நெதன்யாகுவின் அமெரிக்க வருகைக்கான காரணம் குறித்து இதுவரை அதிகார பூர்வ அறிக்கை எதுவும் வெளியாகவில்லை. எனவே இந்தப் பயணம் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்காக இருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் டொனால்ட் ட்ரம்ப் நேற்று, "காசாவில் ஒப்பந்தம் மேற்கொள்ளுங்கள். பணயக்கைதிகளை திரும்பப் பெறுங்கள்!!!" என்று தனது சமூக ஊடக தளத்தில் பதிவிட்டுள்ளார். போர்நிறுத்த ஒப்பந்தத்தை இறுதி செய்ய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை வலியுறுத்துவதாக இந்தப் பதிவு அமைந்துள்ளது.

முன்னதாக, கடந்த வெள்ளிக்கிழமையன்று, அடுத்த வாரத்திற்குள் காசாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படக்கூடும் என்று டொனால்ட் ட்ரம்ப் கூறினார். காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு ட்ரம்ப் பலமுறை அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த நிலையில், இஸ்ரேல் நாட்டில் ஊழல் குற்றச்சாட்டுக்காக விசாரணை வளையத்தில் உள்ள நெதன்யாகுவுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் குறித்து விமர்சித்த டொனால்ட் ட்ரம்ப், "நெதன்யாகு இப்போது ஹமாஸுடன் ஒரு ஒப்பந்தத்துக்காக பேச்சுவார்த்தை நடத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார், அதில் பணயக்கைதிகளை திரும்பப் பெறுவதும் அடங்கும். இஸ்ரேலிய பிரதமரை எதற்கும் இல்லாமல் நாள் முழுவதும் நீதிமன்றத்தில் உட்கார வைப்பது எப்படி சாத்தியம்." என்று தெரிவித்தார்

## போர் நிறுத்தம் பதட்டத்தை தணிக்கும்:
# ஈரானுக்கு ஜெய்சங்கர் அறிவுறுத்தல்

**புதுடில்லி, ஜூன் 30-**

போர் நிறுத்தம் பதட்டத்தை தணிக்கும் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சியிடம் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இஸ்ரேல்- ஈரான் இடையே நிலவி வந்த பதற்றம் முடிவுக்கு வந்தது. இந்நிலையில், மத்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர், ஈரான் வெளியுறவு துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி உடன் தொலைபேசியில் உரையாடினார். இது குறித்து ஈரான் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை: அப்பாஸ் அராக்சி உடன் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தொலைபேசியில் உரையாடினார். சர்வதேச சட்ட மீறல்கள் மற்றும் அதன் இறையாண்மை மீதான தாக்குதல்களுக்கு ஜெய்சங்கர் கண்டனம் தெரிவித்தார். போர் நிறுத்தம் பதட்டங்களை தணிக்கும் என வலியுறுத்தினார்.

ஈரானில் இருந்து நூற்றுக்கணக்கான இந்தியர்களை வெளியேற்றுவதற்கும், இரு நாடுகளுக்கும் இடையிலான தூதரக ஒத்துழைப்பை எளிதாக்குவதற்கான முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்தார். மேற்கு ஆசியாவில் நிலவும் பதட்டங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் விவாதம் நடத்தினர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ‘அவர் ஒரு போர் வீரர்’
# நெதன்யாகுவை புகழ்ந்த ட்ரம்ப்

**வாஷிங்டன், ஜூன் 30-**

இஸ்ரேலில் பிரதமர் நெதன்யாகுவுக்கு செய்வது மிகவும் கொடூரமானது. அவர் ஒரு போர் வீரர்’ என வழக்கு விசாரணைக்கு அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.



2019ம் ஆண்டு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மீது லஞ்சம், ஊழல், நம்பிக்கை மீறல், மோசடி உள்ளிட்ட பிரிவுகளின் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், பெஞ்சமின் நெதன்யாகு மீது நடைபெற்று வரும் ஊழல் வழக்கு விசாரணைக்கு அதிபர் ட்ரம்ப் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து, ட்ரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: இஸ்ரேலில் பிரதமர் நெதன்யாகுவுக்கு அவர்கள் செய்வது மிகவும் கொடூரமானது. அவர் ஒரு போர்வீரர், ஈரானில் உள்ள ஆபத்தான அணுசக்தி அச்சுறுத்தலை அகற்றுவதில் அமெரிக்கா உடன் இணைந்து பணியாற்றி அற்புதமான பணியைச் செய்த பிரதமர்.

முக்கியமாக, அவர் இப்போது ஹமாஸுடன் ஒரு ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார். அதில் பிணைக்கைதிகளை திரும்பப் பெறுவதும் அடங்கும். இஸ்ரேலின் பிரதமரை நாள் முழுவதும் நீதிமன்ற அறையில் உட்கார வைப்பது எப்படி சாத்தியம். இது ஒரு அரசியல் சூனிய வேட்டை. ‘நீதி’யின் இந்த கேலிக்கூத்து ஈரான் மற்றும் ஹமாஸ் பேச்சுவார்த்தைகளில் தலையிடும்.

இஸ்ரேலைப் பாதுகாக்கவும், ஆதரிக்கவும், அமெரிக்கா ஒரு வருடத்திற்கு பில்லியன் கணக்கான டாலர்களை செலவிடுகிறது. வேறு எந்த நாட்டிற்கும் செலவிடுவதைவிட மிக அதிகம். பிரதமர் நெதன்யாகு தலைமையில் நாம் ஒரு மகத்தான வெற்றியைப் பெற்றோம். இந்த வழக்கு விசாரணைகள் நமது வெற்றியைப் பெரிதும் கெடுக்கிறது. அவர் (நெதன்யாகு) செய்ய வேண்டிய ஒரு பெரிய வேலை இருக்கிறது. இவ்வாறு அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார்.

# ராஜஸ்தானில் மண் சரிந்து 4 பேர் பலி

**ஜெய்ப்பூர், ஜூன் 30-**


ராஜஸ்தான் மாநிலம், பரத்பூரில் குழாய் பதிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு இருந்தனர். சில தொழிலாளர்கள் குழாய் பதிப்பதற்காக தோண்டப்பட்ட 10 அடி ஆழ பள்ளத்தை நிரப்பிக் கொண்டிருந்தபோது, மண் சரிந்து விழுந்ததில் சிக்கி கொண்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் நீண்ட நேரம் போராடி மீட்பு பணி மேற்கொண்டனர். இந்த விபத்தில் தொழிலாளர்கள் 4 பேர் உயிரிழந்தனர். தொழிலாளர்கள் 6 பேர் லேசான காயத்துடன் மீட்கப்பட்டு உள்ளனர். மேலும் 5 பேர் மாயம் ஆகி உள்ளனர். அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது. மாவட்ட கலெக்டர், எஸ்.பி., உள்ளிட்ட உயர் அதிகாரிகள், சம்பவ இடத்தில் முகாமிட்டு மீட்பு பணிகளை மேற்பார்வையிட்டு வருகின்றனர். மண் சரிந்து விழுந்ததில் தொழிலாளர்கள் 4 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## அமெரிக்கா சென்ற
# இந்திய இளம்பெண் மாயம்: போலீசார் தீவிர விசாரணை

**வாஷிங்டன், ஜூன் 30-**

திருமணம் செய்து கொள்வதற்காக என்று கூறி, அமெரிக்கா சென்ற 24 வயது இளம் பெண் மாயமானது குறித்து அந்நாட்டு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



திருமணம் செய்து கொள்வதற்காக என்று கூறி, கடந்த 20ம் தேதி இந்தியாவில் இருந்து சிம்ரன், 24, என்ற இளம் பெண் அமெரிக்காவுக்கு சென்றுள்ளார். கடந்த 25ம் தேதி அவர் மாயமாகி விட்டார். எங்கு சென்றார், யாருடன் தொடர்பில் இருக்கிறார் என்பது பற்றி எந்த தகவலும் இல்லை.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், அவர் கடைசியாக இருந்த பகுதிகளில் உள்ள சி.சி.டி.வி., கேமராக்களை ஆய்வு செய்தனர். அதில், அவர் செல்போனை பயன்படுத்தியபடி, யாருக்கோ காத்திருந்தது தெரிய வந்தது. மேலும், சிம்ரனுக்கு ஆங்கிலம் பேச தெரியாது என்றும், அமெரிக்காவில் அவருக்கு உறவினர்கள் யாரும் இல்லை என்பதை போலீசார் கண்டுபிடித்துள்ளனர். இதன் மூலம் அவர் திருமணம் செய்து கொள்வதற்காக அவர் அமெரிக்கா வரவில்லை, வேறு காரணத்துக்காக வந்திருக்கலாம் என்றும் போலீசார் கூறுகின்றனர்.

மர்மமான முறையில் இளம் பெண் மாயமாகி இருப்பது போலீசாருக்கு பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளது. சிம்ரன் இந்தியாவில் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பது பற்றிய தகவல்களை போலீசார் வெளியிடவில்லை. இதே போல, அமெரிக்காவில் படித்து வந்த இந்திய மாணவி சுதிக்ஷா கோனான்கி என்பவர் டொமினிக்கன் குடியரசு நாட்டுக்கு நண்பர்களுடன் சுற்றுலா சென்றபோது மாயமானது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா-பாக்., எல்லை அருகே
# பாக்.கை சேர்ந்த இருவர் சடலமாக மீட்பு

**ஜெய்ப்பூர், ஜூன் 30-**

ஜெய்சால்மரில் உள்ள இந்தியா-பாகிஸ்தான் எல்லைக்கு அருகே, பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த 15 வயது சிறுமி மற்றும் 18 வயது சிறுவன் என இருவரது சிதைந்த உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தியா-பாகிஸ்தான் எல்லைக்கு அருகே ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த 15 வயது சிறுமி மற்றும் 18 வயது சிறுவன் என இருவரது சிதைந்த உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்த உடலை மீட்ட போலீசார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், பாகிஸ்தான் நாட்டு அடையாள அட்டைகள் மற்றும் சிம் கார்டுகள் மீட்கப்பட்டது. இது காதல் விவகாரமா அல்லது சதித்திட்டமா என்பது குறித்து பல்வேறு கோணத்தில் விசாரணை நடந்து வருகிறது என ஜெய்சால்மர் போலீசார் தெரிவித்தனர். இந்தியா-பாகிஸ்தான் எல்லை அருகே இருவரது சிதைந்த உடல்கள் மீட்கப்பட்ட சம்பவம் பரபரப்பையும், சந்தேகத்தையும் கிளப்பி உள்ளது.

# காதலியை கரம் பிடித்த ஜெப் பெசோஸ்

**ரோம், ஜூன் 30-**

61 வயதில் அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ் தனது காதலி லாரனை கரம்பிடித்தார்.



இத்தாலியின் வெனிஸ் நகரில் அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ் தனது காதலி லாரனை கரம்பிடித்தார். அதேசமயம் திருமணத்தால் நகரம் மாசுபடுவதாக கூறி சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போராட்டத்தில் குதித்தனர். உலக பெரும்பணக்காரரும், அமேசான் நிறுவனருமான ஜெப் பெசோஸ் 2020-ம் ஆண்டு தனது மனைவி மெக்கன்சி ஸ்காட்டை விவாகரத்து செய்தார். 61 வயதான ஜெப் பெசோஸ் அதன் பிறகு தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளரான லாரன் சான்செசை காதலித்து வந்தார். இவர்கள் இருவரும் ஜோடியாக பல்வேறு இடங்களை சுற்றினர்.

இந்தநிலையில் ஜெப் பெசோஸ் தனது காதலி லாரனை திருமணம் செய்ய முடிவு செய்தார். இத்தாலியில் உள்ள உலகின் பிரசித்திபெற்ற சுற்றுலாதலமான வெனிஸ் நகரில் அவர்களது திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக வெனிஸ் நகரில் உள்ள சான் ஜியோர்ஜியோ மாகியோர் தீவையே கிட்டத்தட்ட விலைக்கு வாங்கினார். அதாவது அங்குள்ள தங்கும் விடுதிகள், கார்கள், படகு அனைத்தும் முன்பதிவு செய்யப்பட்டன. இதற்கான மொத்த செலவு சுமார் ரூ.100 கோடி என மதிப்பிடப்பட்டு உள்ளது.

அதன்படி திருமணத்துக்கு முந்தைய நிகழ்ச்சிகள் கடந்த 24-ந்தேதி தொடங்கியது. இதில் உலக பணக்காரரான பில்கேட்ஸ், அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் மகள் இவான்கா டிரம்ப் மற்றும் ஹாலிவுட் பிரபலங்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இதனால் வெனிஸ் நகரமே களைகட்டியது. இந்த திருமணத்தால் சுற்றுலாவை நம்பி உள்ள தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

அதேசமயம் மிதமிஞ்சிய சுற்றுலா பயணிகளால் நகரின் சுற்றுச்சூழல் மாசுபடும் என உள்ளூரில் கடும் எதிர்ப்பும் கிளம்பியது. அவரது திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போராட்டத்தில் குதித்தனர். இந்த போராட்டத்துக்கு மத்தியில் மார்கஸ் சதுக்கம் அருகே உள்ள ஆம்பி தியேட்டரில் அவர்களது திருமணம் சிறப்பாக நடந்து முடிந்தது.

# ரஷ்யா வான்வழி தாக்குதலில் விமானி உயிரிழப்பு: உக்ரைன்

**கீவ், ஜூன் 30-**


ரஷ்யாவின் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலின் போது உக்ரைன் விமானி ஒருவர் கொல்லப்பட்டதாகவும், எப்-16 போர் விமானம் ஒன்று காணாமல் போனதாகவும் கீவ் ராணுவம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடான உக்ரைன் - ரஷ்யா இடையே, மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடிக்கிறது. அமெரிக்க அதிபராக கடந்த ஜனவரியில் பதவியேற்ற டிரம்ப், இரு நாடுகளிடையே போரை நிறுத்த முயற்சியை துவங்கினார். ஆனால் அவரது முயற்சி கை கொடுக்கவில்லை. உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகள் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இந்நிலையில், நூற்றுக்கணக்கான ட்ரோன்கள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகளைப் பயன்படுத்தி, மேற்கு, தெற்கு மற்றும் மத்திய உக்ரைன் மீது ரஷ்யா ஒரே இரவில் வான்வழித் தாக்குதலை நடத்தி உள்ளது. இந்த தாக்குதல்கள் ஏராளமான வீடுகள் சேதம் அடைந்து உள்ளன. மேலும் ஆறு பேர் காயம் அடைந்தனர்.

ரஷ்யாவின் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலின் போது உக்ரைன் விமானி ஒருவர் கொல்லப்பட்டதாகவும், F-16 போர் விமானம் ஒன்று காணாமல் போனதாகவும் கீவ் ராணுவம் தெரிவித்துள்ளது. இது குறித்து உக்ரைன் ராணுவ அதிகாரிகள் கூறியதாவது: ரஷ்யா ஒரே இரவில் 477 ட்ரோன்கள் மற்றும் பல்வேறு வகையான 60 ஏவுகணைகளை உக்ரைனுக்குள் ஏவியது. உக்ரைன் படைகள் 211 ட்ரோன்கள் மற்றும் 38 ஏவுகணைகளை அழித்தது. போர் தொடங்கியதிலிருந்து உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய மிகப்பெரிய வான்வழித் தாக்குதல் இது வாகும். ஒரே இரவில் 500க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை ஏவியது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**30-06-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வீட்டில் முக்கியமான பொருட்களை பாதுகாப்பாக வைத்திருப்பது நல்லது. மனைவி, மக்களின் ஆரோக்கிய நிலையில் அக்கறை செலுத்துங்கள். பயணத்திலும் எச்சரிக்கை தேவை.

**ரிஷபம்:-** முதலீடுகளைப் பார்த்து, யோசித்து செய்தால் ஏமாற்றங்களைத் தவிர்க்கலாம். தண்ணீரில் விளையாடுவதை தவிருங்கள். காரியத்தடைகள் காரணமாக தூக்கம் குறையும்.

**மிதுனம்:-** பொன் ஆபரணங்கள் சேரும். குழந்தைகளின் ஆர்வங்களை அறிந்து அந்தத் துறையில் கவனம் செலுத்துங்கள். மனைவி கருத்தரித்தல் போன்று மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரும்.

**கடகம்:-** இஷ்டத்துக்கு மாறாக எண்ணிய காரியங்கள் நடக்கும். வீண் வாக்குவாதங்களை தவிர்க்கவும். தோல்வி கண்டு துவளாதீர்கள். முயற்சி முன்னேற்றம் தரும்.

**சிம்மம்:-** தங்கள் சம்பாத்திய நிலை உயரும். மிகவும் கடினமான செயல்களை கூட எளிதாக, வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உயர் அதிகாரிகளின் பாராட்டுதலைப் பெறுவீர்கள்.

**கன்னி:-** உறவுகளின் செயலால் வெறுப்பு உண்டாகும். கோபத்தால் வம்புகளை விலைக்கு வாங்காதிருப்பது நல்லது. குறிக்கோளின்றி அலைய நேரும். வெற்றிக்கு கடின உழைப்பு தேவை.

**துலாம்:-** தன லாபம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பிரிந்த குடும்பத்தோடு இணைந்து மகிழ்வீர்கள். எல்லா வகையிலும் மகிழ்ச்சி மிக்க நாள்.

**விருச்சிகம்:-** புனிதப் பயணங்கள், கோயில், குளம் என பக்தி மிக்க நாளாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். புகழ் ஓங்கும். அரசு ஆதரவும் உத்தியோக உயர்வு உண்டு.

**தனுசு:-** தெய்வ நம்பிக்கை அதிகமாவதின் காரணமாக மனஅமைதி கூடி, மனச்சுமைகள் குறையும். வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். மன தெம்பும் மகிழ்ச்சியும் பெருகும்.

**மகரம்:-** அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்துச் செல்லவும். பணிபுரியும் இடத்தில் உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடப்பதே முன்னேற்றம் தரும். வழக்கு விவகாரங்கள் அனைத்தையும் ஒத்திப் போடுவது நல்லது.

**கும்பம்:-** பல வழிகளிலும் பணம் வரும். அரசாங்கத்தால் இலாபம் உண்டாகும். அந்தஸ்து உயரும். பேச்சால் காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். கல்வியில் சாதனை புரிவீர்கள்.

**மீனம்:-** தனவரவு கூடும். நீங்கள் எடுக்கும் திடமான முடிவுகளால் வெற்றி உங்களைத் தேடி வரும். "நண்பேண்டா" என்று நண்பர்கள் கை கொடுக்கும் நாள். தேவைகள் அனைத்தும் நிறைவேறி தெம்பாய் இருப்பார்கள்.

## கனமழை, வெள்ளம்:
# பாக்.கில் பலி 38 ஆக உயர்வு

**லாகூர், ஜூன் 30-**

பாகிஸ்தானில் பெய்துவரும் கனமழை, வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானில் பருவமழை முன்கூட்டியே தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி, அந்நாட்டில் கடந்த 26ம் தேதி முதல் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக, கைபர் - பக்துவா, சிந்து, பஞ்சாப் உள்ளிட்ட மாகாணங்களில் கனமழை கொட்டித்தீர்த்து வருகிறது.

கனமழை காரணமாக பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளப்பெருக்கில் சிக்கி ஏற்கனவே 18 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், அந்நாட்டில் பெய்துவரும் கனமழை, வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்துள்ளது. மேலும், 63 பேர் படுகாயமடைந்துள்ளனர். கனமழை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதால் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க மீட்புக்குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## தாய்லாந்தில் இருந்து கடத்தி வரப்பட்ட
# அரிய வகை பாம்புகள் மும்பை விமான நிலையத்தில் பறிமுதல்

**மும்பை, ஜூன் 30-**

தாய்லாந்தில் இருந்து கடத்தி வரப்பட்ட 16 உயிருள்ள, அரிய வகை பாம்புகள் மும்பை விமான நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்டது. கடத்தி வந்த விமான பயணி கைது செய்யப்பட்டுள்ளார்.



தாய்லாந்தின் பாங்காக் நகரில் இருந்து மும்பைக்கு, அரிய வகை விலங்குகள் கடத்தப்படுவதாக தகவல் கிடைத்தது. அதன்படி மும்பை விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். பயணிகள் சிலரது நடவடிக்கை சந்தேகத்துக்கு இடமாக இருந்தது. சோதனையில், தாய்லாந்தில் இருந்து மும்பை வந்த ஒரு பயணி 16 அரிய வகை பாம்புகளை கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பயணியின் உடைமைகளில் இருந்து 16 உயிருள்ள, அரிய வகை பாம்புகள் மீட்கப்பட்டன. பயணியை போலீசார் கைது செய்தனர். அவரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். கடத்தலுக்கு பின்னணியில் வேறு யாருக்கும் தொடர்பு இருக்கிறதா என்று அதிகாரிகள் பல்வேறு கோணத்தில் விசாரிக்கின்றனர். வன உயிரின சட்டப்படி, பாம்புகளை, அவற்றின் வாழ்விடம் அமைந்துள்ள நாட்டுக்கே திரும்ப அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ராணுவத்தினர் மீது தாக்குதல்:
# இஸ்ரேல் பிரதமர் கண்டனம்

**டெல் அவிவ், ஜூன் 30-**

இஸ்ரேலிய இராணுவத்தின் மீதான தாக்குதல் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படும் என்றும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கூறினார்.

பாலஸ்தீன கிராமமான காஃப்ர் மாலிக்கிற்குள் பொதுமக்கள் நுழைவதைத் தடுக்க முயன்றபோது இந்த தாக்குதல் நடந்ததாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் இராணுவ வாகனங்களுக்கும் தீ வைத்து அழித்தனர். அவர்கள் கூட்டத்தை நெருங்கியபோது, அவர்கள் படையினரைத் தாக்கி பாதுகாப்பு வாகனங்களை அழித்ததாக இராணுவம் தெரிவித்துள்ளது. தாக்குதல் நடத்தியவர்களை கலைக்க வானத்தை நோக்கி மூன்று முறை துப்பாக்கிச் சூடு நடத்தியதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தின் மீதான தாக்குதல் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படும் என்றும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கூறினார். இந்த மக்கள் ஒரு சிறிய சிறுபான்மையினர் என்றும், அவர்கள் இஸ்ரேலின் பெரும்பான்மையான மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்றும் நேதன்யாகு மேலும் கூறினார்.

# விமான விபத்து: 4 பேர் உயிரிழப்பு

**மாஸ்கோ, ஜூன் 30-**

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவின் கொலமா மாவட்டத்தில் நேற்று சிறிய ரக விமானம் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. அந்த விமானத்தில் 4 பேர் பயணித்தனர்.

நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது விமானத்தில் எஞ்சின் கோளாறு ஏற்பட்டது. இதனால், விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், விமானத்தில் தீ பற்றி எரிந்தது. இந்த சம்பவத்தில் விமானத்தில் பயணித்த 4 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர், உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மதச்சார்பின்மை வார்த்தை நீக்கம்:
# ஆர்.எஸ்.எஸ். தலைவர் கருத்துக்கு துணை ஜனாதிபதி தன்கர் ஆதரவு

**புதுடில்லி, ஜூன் 30-**

இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இருந்து சோசலிசம் மற்றும் மதச்சார்பின்மை என்ற வார்த்தைகளை நீக்க வேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ். தலைவரின் கருத்தை துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் ஆதரித்துள்ளார்.

வியாழக்கிழமை டெல்லியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், ஆர்.எஸ்.எஸ். பொதுச் செயலாளர் தத்தாத்ரேய ஹோசபாலே, அரசியலமைப்பின் முகவுரையிலிருந்து 'சோசலிச' மற்றும் 'மதச்சார்பற்ற' என்ற வார்த்தைகளை நீக்க வேண்டும் என்று கோரினார். அவசரநிலையின் போது 42வது அரசியலமைப்பு திருத்தம் மூலம் இந்த வார்த்தைகள் சேர்க்கப்பட்டன. அவை நீடிக்க வேண்டுமா என்பது குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும். அம்பேத்கர் வரைந்த அரசியலமைப்பின் முகவுரையில் இந்த வார்த்தைகள் இல்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

இதனை விமர்சித்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போது அதனை தீயிட்டு எரித்தவர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர்.

இன்று பாஜகவோடு கூட்டு சேர்ந்து அரசியலமைப்பை அகற்றிவிட்டு மனுஸ்மிருதியை அமல்படுத்த சதித்திட்டம் தீட்டுகின்றனர் என்று எச்சரித்திருந்தார்.

இந்நிலையில் டெல்லியில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு நிகழ்வில் பேசிய குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர், அரசியலமைப்பின் முகவுரையில் சோசலிச மற்றும் மதச்சார்பற்ற என்ற வார்த்தைகளைச் சேர்த்ததாக காங்கிரஸை விமர்சித்தார். இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த நாட்டின் நாகரிகம், செல்வம் மற்றும் அறிவை இழிவுபடுத்துவதாகும் என்று அவர் கூறினார். இது சனாதன உணர்விற்கு ஒரு அவமானம் என்றும், இந்த மாற்றங்கள் இந்தியாவிற்கு இருத்தலியல் சவால்களை ஏற்படுத்துகின்றன என்றும் அவர் கூறினார்.

நாட்டின் குடியரசு துணைத் தலைவரே முகவுரையை மீண்டும் மாற்றக்கோருவது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருச்சி விமான நிலையத்துக்கு வந்த வெடிகுண்டு மிரட்டலால் பரபரப்பு

**திருச்சி, ஜூன் 30-**

திருச்சி விமான நிலையம் மற்றும் பல்வேறு விமான நிறுவனங்களுக்கும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை இ-மெயில் மூலம் வந்த வெடிகுண்டு மிரட்டலால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

திருச்சி விமான நிலையத்திற்கு நேற்று (29-ம் தேதி) அதிகாலை 1.28-மணிக்கு, திருச்சி விமான நிலைய இயக்குநர் மற்றும் திருச்சியில் உள்ள விமான நிறுவனங்கள் மற்றும் விமான நிலையம் சார்ந்தவர்களின் மின்னஞ்சல்களுக்கு, "வெடிபொருட்கள் உடனடியாக வெளியேறுங்கள். விமான நிலையம் மற்றும் விமானங்களைச் சுற்றி வைக்கப்பட்டுள்ள குப்பைகளுக்குள் சக்திவாய்ந்த வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன.

கட்டிடத்தை விட்டு அவசரமாக வெளியேற வேண்டும் இந்த பயங்கரவாத தாக்குதலுக்குப் பின்னால் உள்ள குற்றவாளிகள் நாங்கள், "ரோட்கில்" மற்றும் "கியோ" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுகுறித்து தகவலறிந்த விமான நிலைய மத்திய தொழில் பாதுகாப்பு படை மற்றும் திருச்சி மாநகர வெடிகுண்டு கண்டறியும் மற்றும் செயலிழக்கச் செய்யும் பிரிவு போலீசார் விமான நிலைய முனையம், வளாகம் உள்ளிட்ட பகுதிகளில் அங்குலம் அங்குலமாக சோதனை செய்தனர்.

சோதனையின் முடிவில் வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என்பது தெரியவந்தது. இதுகுறித்து விமான நிலைய மேலாளர் கொடுத்த புகாரின்பேரில் விமான நிலைய போலீஸார் வழக்குப்பதிந்து மின்னஞ்சல் அனுப்பிய மர்ம நபர்களை தீவிரமாக தேடிவருகின்றனர்.

# எமர்ஜென்சியை எதிர்த்து போராடியவர்களை நினைவில் கொள்ள வேண்டும்: பிரதமர் மோடி

**புதுடில்லி, ஜூன் 30-**

எமர்ஜென்சியை துணிச்சலுடன் எதிர்த்து போராடியவர்களை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் என்று, 'மன் கி பாத்' உரையில் பிரதமர் மோடி பேசினார்.

மன் கிபாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: அதிகாரம் அளிப்பதற்கான ஒரு வழி யோகா. புனித யாத்திரைகள் உடலை ஒழுங்குபடுத்துவதற்கும், மனதை தூய்மைப் படுத்துவதற்கும், அன்பையும், சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கும் ஒரு சிறந்த வழியை உருவாக்கும். நாட்டில் எமர்ஜென்சியை அமல் செய்தவர்கள், அரசியல் சட்டத்தை கொலை செய்தது மட்டுமின்றி, நீதித்துறையை அடிமையாக வைத்திருக்கவும் விரும்பினர்.

எமர்ஜென்சியை துணிச்சலுடன் எதிர்த்து போராடியவர்களை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.



அந்த நேரத்தில் மக்கள் பெரிதும் சித்ரவதை செய்யப்பட்டனர்.

இன்று நாட்டின் 95 கோடி பேர் ஏதேனும், ஒரு சமூக நலன் பாதுகாப்பு திட்டத்தால் பயன் அடைகின்றனர். உள்ளூர் பொருட்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். நமது அரசியல் அமைப்பு சட்டத்தை பாதுகாக்க நாம் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

இந்த நேரத்தில் அனைவரது பார்வையும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் மீது உள்ளது. பெண்கள் தலைமையிலான வளர்ச்சி, இந்தியாவிற்கு ஒரு புதிய எதிர்காலத்தை உருவாக்கத் தயாராக உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

# உத்தரகாண்ட் நிலச்சரிவில் சிக்கி 2 பேர் பலி; 7 பேர் மாயம்

**டேராடூன், ஜூன் 30-**

உத்தரகாண்ட்டில் நிலச்சரிவில் சிக்கி 2 தொழிலாளர்கள் பலியாகினர்.

உத்தரகாண்டின் யமுனோத்ரி நெடுஞ்சாலையில் சிலாய் பந்த் பகுதியில் ஓட்டல் ஒன்றின் கட்டுமான பணி நடந்து வருகிறது. இதில், 19 முதல் 20 தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர். இதற்காக, தொழிலாளர்கள் தங்க வசதியாக முகாம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் கன மழையால் அந்த பகுதியில் நேற்று காலை 6 மணியளவில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், முகாமில் தங்கியிருந்த தொழிலாளர்கள் சிக்கி கொண்டனர். எனினும், அதிர்ஷ்டவசத்தில் அவர்களில் 10 பேர் மீட்கப்பட்டு விட்டனர். 9 பேரை காணவில்லை. நெடுஞ்சாலையில் 10 முதல் 12 மீட்டர் நீளமுள்ள பகுதி வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டது.

இதனை தொடர்ந்து மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படையினர் மற்றும் போலீசார் கூட்டாக இணைந்து மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். உத்தரகாண்டில் 24 மணிநேர சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. அடுத்த 24 மணிநேரத்திற்கு சர் தம் யாத்திரை சஸ்பெண்டு செய்யப்பட்டு உள்ளது. சுற்றுலா பயணிகள் பாதுகாப்பான இடங்களில் இருக்கும்படி அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

# போலீசாரால் மட்டுமே பலாத்கார சம்பவங்களை தடுக்க முடியாது
## மத்திய பிரதேச டி.ஜி.பி., சொல்கிறார்

**போபால், ஜூன் 30-**

'' மொபைல்போன் மற்றும் இணைய சேவை பயன்பாடு அதிகரிப்பால், பலாத்கார சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. போலீசாரால் மட்டும் அதனை தடுக்க முடியாது,'' என ம.பி., மாநில போலீஸ் டி.ஜி.பி., கூறியுள்ளார்.

பலாத்கார சம்பவங்கள் அதிகரித்து வருவது தொடர்பாக நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு டி.ஜி.பி., கைலாஷ் மக்வானா கூறியதாவது: இதற்கு பல காரணங்கள் உள்ளன. எனது எண்ணப்படி, இணைய சேவை, மொபைல்போன் பயன்பாடு, ஆபாச படங்கள், மதுபானம் எளிதாக கிடைப்பதும் காரணம். எங்கிருந்தாலும் மொபைல்போன் மூலம், ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்வதும் காரணம். சமூகத்தில் ஒழுக்கம் குறைந்து வருகிறது. இவை அனைத்தும் பலாத்கார சம்பவங்கள் அதிகரிக்க காரணமாகிறது.

இணையத்தில் கிடைக்கும் ஆபாச படங்கள், இளம் வயதில் இளைஞர்களின் மனதிற்கு இடையூறு ஏற்படுத்துகிறது. பலாத்கார சம்பவங்கள் அதிகரிப்பதற்கு இதுவும் மற்றொரு காரணம் ஆகும். எனவே, சம்பவங்களை போலீசார் மட்டும் கட்டுப்படுத்த வேண்டும் என்பது சாத்தியம் இல்லாதது.

வீடுகளிலும், ஒருவர் பேச்சை மற்றவர் கேட்பது கிடையாது. குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் பேச்சை கேட்க மறுக்கிறார்கள். அப்போது அவமானம் மற்றும் மரியாதை என்ற உணர்வு இருந்தது. ஆனால், அவை இப்போது மறைந்துவிட்டன. இவ்வாறு அவர் கூறினார்.

## 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்கள்:
# கீழடி அறிக்கையை இனியாவது மத்திய அரசு வெளியிடுமா..?
## அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி

**சென்னை, ஜூன் 30-**

கீழடியில் தமிழ் மக்கள் நாகரிகத்தில் சிறந்தவர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கான அறிவியல் சான்றுகள் ஒன்றின் பின் ஒன்றாக உலக அரங்கில் நிரூபிக்கப்படும் நிலையில், இதற்கு பின்பாவது மத்திய அரசு கீழடி அறிக்கையை வெளியிடுமா என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி எழுப்பியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கீழடியில் நகர நாகரிகம் நிலவியது தொல்லியல் சான்றுகள் மூலம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. கி.மு. 6 ஆம் நூற்றாண்டளவில் படிப்பறிவும், எழுத்தறிவுப் பெற்ற மேம்பட்ட சமூகமாக தமிழ்ச் சமூகம் விளங்கியதை கரிமப் பகுப்பாய்வு காலக்கணக்கீடு மூலம் முதன்முதலாக தொல்லியல் துறை உறுதிபடுத்தியுள்ளது. இதனை நூலாக வெளியிட்டும் உலகறியச் செய்தது.

இதனிடையே அமர்நாத் ராமகிருஷ்ணன் தாக்கல் செய்த கீழடி அறிக்கையில் மத்திய அரசு திருத்தம் கோரியிருந்தது. கீழடி தொடர்பாக 982 பக்க அகழாய்வு அறிக்கையினை அமர்நாத் ராமகிருஷ்ணன் சமர்பித்த நிலையில், அதனை வெளியிட மத்திய அரசு மறுத்து வருகிறது. இந்நிலையில், கீழடியில் கிடைத்த மண்டை ஓடுகளை வைத்து, 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் முகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள ஆய்வகத்தில் 3டி முறையில் 2 முகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. 80% அறிவியல், 20% கலையை பயன்படுத்தி இவை வடிவமைக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். கொந்தகையில் 800மீ அகழாய்வில் இந்த மண்டை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டது. கொந்தகை பகுதியில் வாழ்ந்த ஆண்கள் 5.7 அடியும், பெண்கள் 5.2 அடி உயரத்திலும் இருந்திருக்கக் கூடும் என ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

கீழடி அகழாய்வில் கண்டறியப்பட்ட பெரும்பாலான எலும்புக்கூடுகள் 50 வயது மனிதர்களுடையவை. டி.என்.ஏ. பகுப்பாய்வு நடத்தி இவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பது பற்றி அறிய திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில், கீழடியில் வாழ்ந்த தமிழர் முகங்கள் குறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அவரது பதிவில், கீழடியில் கிடைத்த மனித மண்டை ஓடுகளை ஆய்வு செய்து அறிவியல் வழியில் 2500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதனின் முகத்தை வடிவமைத்துள்ளது இங்கிலாந்தின் லிவர்பூல் ஜான் மூர்ஸ் பல்கலைக்கழகம்.

கீழடியில் தமிழ் மக்கள் நாகரிகத்தில் சிறந்தவர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கான அறிவியல் சான்றுகள் ஒன்றின் பின் ஒன்றாக உலக அரங்கில் நிரூபிக்கப்படுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

இதற்கு பின்பாவது மத்திய அரசு கீழடி அறிக்கையை வெளியிடுமா என்பதே 8 கோடி தமிழர்களின் மனங்களில் எழும் ஒரே கேள்வி என்று பதிவிட்டுள்ளார்.

# பள்ளி குழந்தைகளின் விஷயத்திலும் மத்திய அரசு அரசியல் செய்கிறது
## அமைச்சர் அன்பில் மகேஸ் குற்றச்சாட்டு

**கோவை, ஜூன் 30-**

பள்ளி குழந்தைகளின் விஷயத்திலும் மத்திய அரசு அரசியல் செய்கிறது என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

கோவையில் மாநில அளவிலான அடைவு ஆய்வு, அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுடன் மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வகித்தார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலமுரளி வரவேற்றார். ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையர் சிவகுருபிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் 6 முதல் 8-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கணினி அறிவை வளர்ப்பதற்காக 850 கணினி ஆய்வகங்கள் அமைக்கும் பணி தொடங்கியுள்ளது. மத்திய அரசு எஸ்.எஸ்.ஏ. திட்டத்துக்கு வழங்க வேண்டிய பணத்தை இன்னும் கொடுக்கவில்லை. பள்ளி குழந்தைகளின் விஷயத்திலும் மத்திய அரசு அரசியல் செய்கிறது. மத்திய அரசு தனது பங்களிப்பை வழங்கி விட்டால் உடனடியாக மாணவர் சேர்க்கைக்கான போர்ட்டல் செயல்படும். பள்ளிக்கூடம் என்பது அறிவு சார்ந்த இடமாகவும், முற்போக்கான விஷயங்களை கற்றுக் கொடுக்கும் இடமாகவும் உள்ளது. நீட் தேர்வில் தாலியைக் கூட கழற்றி வைத்துவிட்டு எழுத வேண்டும் என்று கட்டாயப்படுத்தியபோது மவுனமாக இருந்தவர்கள் இப்போது வேறுவிதமாக பேசுகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

இதைத்தொடர்ந்து காந்திபுரத்தில் ரூ.300 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் பெரியார் நூலகத்தின் கட்டுமான பணிகளை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# புதுச்சேரி பா.ஜ.க. தலைவராகிறார் ராமலிங்கம்: முறைப்படி இன்று அறிவிப்பு வெளியாகிறது

**புதுச்சேரி, ஜூன் 30-**

முன்னாள் நியமன எம்.எல்.ஏ. ராமலிங்கம் புதுச்சேரி மாநில பா.ஜ.க. தலைவராக இன்று முறைப்படி அறிவிக்கப்படுகிறார்.

புதுச்சேரி காங்கிரஸ் ஆட்சியில் சபாநாயகராக இருந்த வி.பி.சிவகொழுந்துவின் சகோதரரான வி.பி.ராமலிங்கம், கடந்த 2019-ல் இருந்து காங்கிரஸ் கட்சியில் இருந்து பா.ஜ.க.வில் இணைந்தார். அதன் பிறகு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வின் வெற்றிக்காக பணியாற்றிய இவர் 2021-ம் ஆண்டு மே 11-ம் தேதி நியமன சட்டமன்ற உறுப்பினாக தேர்வு செய்யப்பட்டார்.

அதன் பிறகு கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக சட்டமன்ற உறுப்பினராக பணி



யாற்றிய அவர் கடந்த 27-ம் தேதி தனது பதவியை ராஜினாமா செய்தார். இந்த நிலையில் பா.ஜ.க. புதிய தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பு மனு தாக்கல் நேற்று கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

தேர்தல் நடத்தும் அதிகாரி அகிலனிடம் மனு தாக்கல் செய்தார்.

மனு தாக்கலின் போது மேலிட பார்வையாளர் நிர்மல் குமார் சுரானா, அமைச்சர் நமச்சிவாயம், முன்னாள் அமைச்சர் சாய்.சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜான் குமார், கல்யாணசுந்தரம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் உடன் இருந்தனர். தலைவர் பதவிக்கு வேட்பு மனு தாக்கல் நடைபெற்று வரும் நிலையில் வேறு யாரும் தலைவர் பதவிக்கு போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்யாததால் வி.பி.ராமலிங்கம் புதுச்சேரி மாநில பா.ஜ.க. தலைவராக ஒரு மனதாக தேர்வு செய்யப்படுகிறார். இன்று முறைப்படி அறிவிப்பு வெளியாகிறது.

# தவறான சமூக ஊடக பதிவுகளுக்கு யாரும் எதிர்வினை ஆற்ற வேண்டாம்
## நிர்வாகிகளுக்கு ராமதாஸ் உத்தரவு

**திண்டிவனம், ஜூன் 30-**

சமூக ஊடகங்களில் நம்மை பற்றி தவறாக பதிவிட்டாலும் எதிர்வினை ஆற்ற வேண்டாம் என நிர்வாகிகளுக்கு ராமதாஸ் உத்தரவிட்டுள்ளார்.

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் மற்றும் அவரது மகன் அன்புமணி ராமதாஸ் இடையே கடந்த சில மாதங்களாக மோதல் போக்கு இருந்து வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பாக நிருபர்களை சந்தித்த டாக்டர் ராமதாஸ், தனது மகன் அன்புமணி ராமதாஸ் குறித்து பல்வேறு அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை வைத்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சென்னை பனையூரில் பா.ம.க. சமூக ஊடகப் பேரவை ஆலோசனைக் கூட்டம் அன்புமணி ராமதாஸ் தலைமையில் நடைபெற்றது .அப்போது டாக்டர் அன்புமணி ராமதாஸ் பேசுகையில் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தது டாக்டர் ராமதாசிற்கு தெரிந்தே வைக்கப்பட்டது.

ஆனால் அவர் ஏன் இது போல் பேசினார் என்று தெரியவில்லை என பல்வேறு குற்றச்சாட்டை வைத்தார்.

இந்த நிலையில் நேற்று பா.ம.க.சமூக ஊடகப்பேரவை ஆலோசனை கூட்டம் ராமதாஸ் தலைமையில் தைலாபுரத்தில் நடைபெற்றது. இதில் டாக்டர் ராமதாஸ் சமூக வலைதளங்களில் கருத்துக்களை எப்படி பதிவு செய்ய வேண்டும் என ஆலோசனையில் ஈடுபட்டார்.

அப்போது அவர் பேசும் போது சமூக ஊடகங்களில் யாரையும் இழிவுபடுத்தும் வகையில் பதிவேற்றம் செய்யக்கூடாது. நம்மை பற்றி தவறாக பதிவிட்டாலும் எதிர்வினை ஆற்ற வேண்டாம். சமூக வலைதளங்களில் நளினமாகவும், நயமாகவும் பதிவிட்டு நம்மை பற்றி விமர்சனம் செய்பவர்களை நம் பக்கம் இழுக்க வேண்டும் என்றார்.

## 10 ஆண்டுகள் நிறைவு:
# சென்னை மாநகர மெட்ரோவில் இதுவரை 39 கோடி பேர் பயணம்

**சென்னை, ஜூன் 30-**

சென்னை மெட்ரோ ரெயில் சேவை தொடங்கி 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதுவரை 39 கோடி பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மெட்ரோ ரெயில் முக்கிய பங்காற்றுகிறது. தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் மெட்ரோ ரெயிலில் பயணிக்கின்றனர். இந்நிலையில், சென்னை மெட்ரோ ரெயில் தொடங்கி நேற்றுடன் 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. கடந்த 2015 ஜுன் 29ம் தேதி கோயம்பேடு, ஆலந்தூர் இடையே மெட்ரோ ரெயில் சேவை தொடங்கப்பட்டது. மெட்ரோ ரெயில் சேவை தொடங்கி 10 ஆண்டுகளில் மொத்தம் 39 கோடி பேர் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்துள்ளனர்.

முதற்கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்ததால் தற்போது 2ம் கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. 118.9 கிலோ மீட்டர் தொலைவுக்கு 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2ம் கட்ட மெட்ரோ ரெயில் பணிகள் 3 வழித்தடங்களில் நடைபெற்று வருகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# கூட்டணி குறித்து இ.பி.எஸ். தெளிவுபடுத்த வேண்டும்: வி.சி.க. தலைவர் திருமாவளவன்

**குன்னம், ஜூன் 30-**

கூட்டணி குறித்து எடப்பாடி பழனிசாமி தான் தெளிவுபடுத்த வேண்டும் என்று திருமாவளவன் கூறினார்.

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் அருகே நடந்த தனியார் வேலை வாய்ப்பு முகாமில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எம்.பி. கலந்து கொண்டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:- கூட்டணி குறித்து எடப்பாடி பழனிசாமி இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை. கூட்டணி குறித்து மத்திய அமைச்சர் அமித்ஷா மட்டுமே திரும்பத் திரும்ப சொல்லி வருகிறார். இந்தியா கூட்டணியில் தமிழகத்தை பொறுத்தவரை தி.மு.க. தலைமையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியாக உள்ளது. அதே போல் அ.தி.மு.க. தலைமையில் கூட்டணி உள்ளதா? இல்லையா? என்ற கேள்வி எழுகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணி தான் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியா அல்லது அ.தி.மு.க. தலைமையில் தமிழ்நாட்டில் தனி கூட்டணியா என்ற தெளிவும் தேவைப்படுகிறது. ஆகவே கூட்டணி தொடர்பாகவும், கூட்டணி ஆட்சி தொடர்பாகவும் எடப்பாடி பழனிசாமி தான் தெளிவுபடுத்த வேண்டும். பா.ம.க. தலைவர் ராமதாஸ், காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை சந்திப்பு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. இது கூட்டணி தொடர்பான சந்திப்பா என்றும் தெரியாது. யூகத்தின் அடிப்படையில் ஒரு கருத்தை சொல்ல முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# தவறிழைத்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்
## தமிழக வெற்றிக்கழகம் வலியுறுத்தல்

**சென்னை , ஜூன் 30-**

திருப்புவனம் காவல் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர் உயிரிழந்த விவகாரத்தில், தவறிழைத்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என த.வெ.க.பொதுச்செயலாளர் என்.ஆனந்த் தெரிவித்துள்ளார்;

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், கடந்த வெள்ளிக்கிழமை அன்று. மடப்புரம் கோவிலுக்கு வந்த நிகிதா என்பவரது நகை மாயமான சம்பவத்தில், காவல் துறையால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அஜித்குமார், விசாரணையில் இருந்த போது திடீரென உயிரிழந்துள்ளார்.

காவல் துறையின் கட்டுப்பாட்டில் விசாரணைக்கு



உட்படுத்தப்படுபவர் உயிரிழப்பது ஒன்றும் புதிதல்ல. ஏற்கெனவே பல சம்பவங்கள். இதற்கு உதாரணமாக உள்ளன.

மேலும், அண்ணா நகர் சிறுமி பாலியல் வழக்கு, கனகம்மாசத்திரம் கர்ப்பிணிப் பெண்ணைக் காவலர் காலால் உதைத்த சம்பவம். என காவல் துறையின் அராஜகப் போக்கைப் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். காவல் துறையின் போக்கைக் கவனித்தால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சி நடைபெறுகிறதா அல்லது காவல் துறையின் ஆட்சி நடைபெறுகிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

திருப்புவனம் காவல் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர் உயிரிழந்த விவகாரத்தில், தவறிழைத்த காவலர்களைப் பணியிடை நீக்கம் செய்தால் மட்டும் போதாது. முறையான விசாரணை நடத்தி, தவறிழைத்தவர்கள் மீது வழக்குப் பதிந்து. அவர்களைக் கைது செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார் .

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



புரி நெரிசல் சம்பவம் குறித்து மாநில அரசு முறையான விசாரணை மேற்கொள்ள வேண்டும். இதற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இதுபோன்ற விழாக்களில் மக்களின் பாதுகாப்பு மற்றும் பெருங்கூட்டத்தை முறையான திட்டமிடல் உடன் கையாள வேண்டியது அவசியம்.

**- கார்கே**



மத்திய அரசு நிதி தராததால் வெள்ள நிவாரணம், ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கவில்லை என்று தி.மு.க. அரசு சொல்கிறது. தி.மு.க.வை ஒழிக்க வேண்டும் என பாஜக சொல்கிறது, பாஜகவை வளரவிடக் கூடாது என திமுக சொல்கிறது. என்னுடைய கனவு இருவரையும் ஒழிக்க வேண்டும் என்பதுதான்.

**- சீமான்**



தேசிய ஜனநாயக கூட்டணி ஒற்றுமையாக இந்த தேர்தலை சந்திக்கும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். வெற்றியும் பெறுவோம். எல்லா கூட்டணி குழப்பத்துக்கு காரணம் பா.ஜ.க. என்று செல்வப்பெருந்தகை கூறி வருகிறார். முதலில் உங்கள் கூட்டணி ஒற்றுமையாக இருக்கிறதா என்பதை பாருங்கள்.

**- தமிழிசை**



தே.மு.தி.க. கூட்டணி நிலைப்பாடு குறித்து 2026 ஜனவரி 9ம் தேதி கடலூர் மாநாட்டில் தெரிவிக்கப்படும். சட்டமன்றத் தேர்தலில் தமிழக கட்சிகள் கூட்டணியில் தலைமை வகிப்பதே சிறந்தது. கூட்டணி ஆட்சி என்பதை வரவேற்கிறோம். அதிகாரப்பகிர்வு மக்களுக்கு நல்லதையே கொண்டு சேர்க்கும்.

**- பிரேமலதா**

### தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின்

# ஈரோடு மாவட்ட மத்திய செயற்குழு மற்றும் நிர்வாகிகள் பதவியேற்பு விழா



**ஈரோடு ஜூன் 30-**

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாவட்ட மதிய செயற்குழு மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பதவியேற்பு விழா தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய ஈரோடு மாவட்ட கட்டிடத்தில் மாநில பொதுச் செயலாளர் தேசிங்கு ராஜன் தலைமையில் நடைபெற்றது .

ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் மாவட்டத் தலைவர் நகராட்சி மாநகராட்சி துறையைச் சேர்ந்த வி.எம். வெங்கிடுசாமி. மாவட்டச் செயலாளர் நில அளவை துறையைச் சேர்ந்த எஸ்.பஞ்சயன் மாவட்டத் துணைத் தலைவர் நகரம் மா. சண்முக சுந்தரம் புறநகரம் சி. தனசேகர் சீனிவாசன் மாவட்டம் மகளிர் அணி செயலாளர் சுகந்தி மாவட்ட இணைசெயலாளர்கள் 1) ஆர். தமிழ்வாணன் வேளாண்மை துறை 2)ஆர். பிரேம் குமார் நகராட்சி மாநகராட்சி துறை 3 புவனேஸ்வரி 4. சதீஷ்குமார் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை. அமைப்புச் செயலாளர் பி.ராஜன் பிற்பட்டோர் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை. பிரச்சார செயலாளர். பாபு சங்கர் மருத்துவம். ந. ஈஸ்வரமூர்த்தி மத்திய செயற்குழு உறுப்பினர் கல்வித்துறை. கோ. விஜய நிர்மலா தேவி பொது சுகாதாரத் துறை. மாவட்ட மகளிர் அணி செயலாளர் அ. முகமது ஆசிப் மாவட்ட இளைஞரணி செயலாளர் மருத்துவத்துறை இரா. ராஜலிங்கம் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் சமூக நலத்துறை-சத்துணவு 1)கி. சிவானந்தம் தணிக்கையாளர் பொது சுகாதாரத்துறை 2). சந்தோஷ் தணிக்கியாளர் கல்வித்துறை ப. கோபாலகிருஷ்ணன் மாவட்ட தொழில் நுட்ப அணி செயலாளர் நகராட்சி மாநகராட்சி துறை உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் பதவியேற்பு செய்து கொண்டனர்.

நடைபெற்ற மாவட்ட மத்திய செயற்குழு கூட்டத்தில் பழைய ஓய்வூதிய திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி தர வேண்டும் என்றும், சமூக நலத்துறை நகராட்சி மருத்துவத்துறை சுகாதாரத் துறையில் உள்ள தினக்கூலி பணியாளர்கள் சிறப்பு கால முறை ஊதிய பணியாளர்களை நிரந்தர படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டது. போலியான சங்கத்தை கண்டறிந்து உடனடியாக அரசுக்கு தெரிவிப்பதுடன் அதனை மாவட்ட நிர்வாகம் நீக்கிவிட வேண்டும் என்பதையும் கோரிக்கையாக ஈரோடு மாவட்டம் சார்பாக தெரிவிக்கப்பட்டது. மாவட்ட மையத்தில் மாவட்ட பொருளாளராக இருந்து சங்கத்திலிருந்து வெளியேறிய ஊரக வளர்ச்சித் துறை சக்திவேலை கண்டித்து தீர்மானம் இயற்றப்பட்டது . போலியான சங்கங்களை அகற்றாவிட்டால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக உண்ணாவிரதம் போராட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாநில துணைத்தலைவர் வி.மகேந்திர குமார் மற்றும் சத்துணவு பணியாளர்கள் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் மாத மாதையன் ஆகியோர்கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர் மற்றும் இணைப்புச் சங்க தலைவர்கள் அனைத்து துறையை சார்ந்த நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்மாவட்ட பொருளாளர் வெ.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

# தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் மாவட்ட செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டம்



ஈரோடு ஜூன் 30

தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் மாவட்ட செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

வருகின்ற ஜூலை 25 அன்று ஈரோட்டுக்கு தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் நிறுவனத் தலைவர் பெ.ஜான் பாண்டியன் வருகை தர உள்ளார் . தொடர்ந்து அவர் ஈரோடு மாவட்டம் முழுவதும் சுற்று பயணம் செய்து பிரச்சாரம் செய்ய உள்ளார்

இதை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று மாவட்ட தலைமையகத்தில் மாவட்ட தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது மாவட்ட செயலாளர் மயில்துரையன் முன்னிலை வகித்தார்

இதில் மாநகர இளைஞரணி சிவபாண்டியன் மாவட்ட இணை செயலாளர் சீனிவாசன் மாவட்ட மாவட்ட இளைஞர் இணை அணி செயலாளர் தீபன் குமார் கொடுமுடி ஒன்றிய செயலாளர் ரமேஷ் பவானிசாகர் ஒன்றிய செயலாளர் சந்திரசேகரன் பள்ளிபாளையம் ஒன்றிய செயலாளர் சுப்பிரமணி பவானி நகர செயலாளர் வேல்முருகன் சென்னிமலை ஒன்றிய இளைஞரணி தலைவர் சேது மொடக்குறிச்சி ஒன்றிய இணைச் செயலாளர் லிங்கேஷ் மௌலி மாநகர 30 வது வார்டு செயலாளர் கோவிந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### ஈரோடு கொல்லம்பாளையத்தில்

# தி.மு.க. அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டம்



**ஈரோடு ஜூன் 30:**

தி மு க தலைவர் கருணாநிதியின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் தி மு க அரசின் 4 ம் ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் ஈரோடு கொல்லம்பாளையம் பகுதி சோலார் பஸ் நிறுத்தம் அருகே கொல்லம்பாளையம் பகுதி திமுக செயலாளர் கா. லட்சுமணக்குமார் தலைமையில் நடந்தது.

தி மு க இளைஞர் அணி சார்பில் நடந்த இந்த கூட்டத்தில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சு. தினேஷ்குமார்வரவேற்றார்.

தலைமை கழக பேச்சாளர் ஈரோடு டிவி தமிழரசு இளம் பேச்சாளர் ம. மோகநிதி ஆகியோர் இதில் கலந்து கொண்டு பேசினர். கூட்டத்தில்

ஈரோடு தெற்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் குமார் முருகேஷ் ஆ.செந்தில்குமார்அ. செல்ல பொண்ணு கதிரம்பட்டி தா.மகாலிங்கம் ஈரோடு மாநகர திமுக செயலாளர் மு.சுப்பிரமணியம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் துணை அமைப்பாளர் இரா. நித்தின் மாமன்ற உறுப்பினர்கள் சுப்புலட்சுமி ஜெயக்குமார் எம்.என். ராமலிங்கம் லோ.குணசேகரன் சு.சக்திவேல் கே.தண்டபாணி மாநகர அமைப்பாளர் கே.டி.சேந்தபுகழன் துணை அமைப்பாளர்கள் பா. ஜாகிர் உசேன் செ.ரமேஷ் எஸ்.சசிகுமார் அ.பார்த்திபன் பெ.சீனிவாசன் வி. நவீன் குமார் அ.அன்பரசன் பகுதி துணை அமைப்பாளர்கள் கி.கௌசிக் மு.முகமது இஸ்மாயில் பி. வி. சுபாஷ் சே. கிரிஸ்டோபர் ரா.தினேஷ் பாபு உள்பட பலர் கலந்து கொண்டனர். பகுதி துணை அமைப்பாளர் ப. அருண் விக்னேஷ் நன்றி உரையாற்றினார்கூட்டம் ஏற்பாடுகளை மாநகர துணை அமைப்பாளரும் பகுதி பொறுப்பாளர் பா. ஜாகிர் உசேன் செய்திருந்தார்

### ஈரோடு மாவட்டத்தில்

# பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பது குறித்து மாவட்ட அளவிலான விழிப்புணர்வு கருத்தரங்கம்

## முதன்மை மாவட்ட நீதிபதி எஸ்.சமீனா, கலெக்டர் ச.கந்தசாமி தொடங்கி வைத்தனர்

ஈரோடு,ஜூன்.30-

ஈரோடு மாவட்டம், நஞ்சனாபுரம், கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம், பாலின சமத்துவம் மற்றும் உள்புகார்கள் குழுவின் சார்பில், பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பது குறித்து மாவட்ட அளவிலான ஒரு நாள் விழிப்புணர்வு கருத்தரங்கினை முதன்மை மாவட்ட நீதிபதி எஸ்.சமீனா மற்றும் கலெக்டர் ச.கந்தசாமி துவக்கி வைத்தார்கள்.

இக்கருத்தரங்கில் கலெக்டர் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம், பாலின சமத்துவம் மற்றும் உள்புகார்கள் குழுவின் சார்பில், பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பது குறித்து இன்றைய தினம் இந்த கருத்தரங்கு நடைபெறுகிறது. பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாவட்டமாக திகழ்கிறது. பாரதியார் தொடங்கி தந்தை பெரியார் வரை பல்வேறு தலைவர்கள் காட்டிய வழியில் பெண்களை தனக்கு இணையான சக மனிதனாக கருத வேண்டும் என்ற வலியுறுத்தி வந்ததன் அடிப்படையில் கல்வி, பொருளாதாரம் என பல்வேறு துறைகளில் இன்று வரை தமிழ்நாடு முன்னோடி மாவட்டமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் தான் முதலில் உள்ளாட்சியில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. நம் மாநிலத்தில் தான் தொழிலகங்களில் 41 சதவிகிதம் பெண்கள் முறையாக பதிவு பெற்று பணியாற்றி வருகிறார்கள். இக்கருத்தரங்கின் மூலம் பல்வேறு தரப்பினருக்கு பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை ஒழிப்பது குறித்தும், பெண்களின் சம பாலினமாக கருதுவது குறித்தும், பெண்களுக்கு ஆரோக்கியமான சூழ்நிலையை ஒரு ஆண் எவ்வாறு ஏற்படுத்தி தர வேண்டும் என பல தகவல்களை அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். இத்தகைய கருத்தரங்கினை தலைமையேற்று நடத்திக்கொடுத்த முதன்மை மாவட்ட நீதிபதி





அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஒவ்வொரு நிறுவனத்திலும் பெண்களுக்கான வன்முறையை தடுக்கும் விதமாக பாதுகாப்பு குழு அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதோடு அவர்களுக்கு எதிரான வன்கொடுமைகளை எதிர்த்து போராடுபவராகவும் இருக்க வேண்டும். ஆண்கள் பெண்களுக்கு முழு உறுதுணையாக இருந்து பாதுகாக்க வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து நம் சமுதாயத்தை மென்மேலும் முன்னேறிய சமுதாயமாக மாற்ற வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் அதிகாரம், கலாச்சார, பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளால் உருவாக்கப்பட்ட பாலின பாகுபாட்டிற்கான காரணங்களை புரிந்து கொள்வது, பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றம், அதன் காரணங்கள் மற்றும் தாக்கம், ஜூனியரகள் மற்றும் சட்டப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், Pழுளுர் சட்டத்தின் கீழ் வழக்கறிஞர் சங்கங்களின் கடமைகள், குறை தீர்க்கும் வழிமுறைகள், பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்புக் கொள்கையை செயல்படுத்துவதற்கான பாலின் நடுநிலை அணுகுமுறை, ஆரோக்கியமான பணிச்சூழலை உருவாக்குவதில் ஆண்கள் மற்றும் பெண்களின் பங்கு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளின் கீழ் வழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இக்கருத்தரங்கில் கருத்தாளர்கள் உரையாற்றினார்கள்.

இக்கருத்தரங்கில், தலைவர் மாவட்ட நீதிபதி, நிரந்தர மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்) சுகந்தி, முதன்மை சார்பு நீதிபதி இளவரசி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.காஞ்சன் சௌத்திரி, கூடுதல் மாவட்ட நீதிபதி (திருச்செங்கோடு) ஆர்.மாலதி, முன்னாள் காவல் கண்காணிப்பாளர் கலியமூர்த்தி இ.கா.ப., மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, செயலர் ஆர்.ஸ்ரீவித்யா, வழக்கறிஞர் வி.முத்து முத்தையா, ஆர்.பி.பவுண்டேஷன் நிறுவனர் மற்றும் இயக்குநர் பிரியா செந்தில், நீதிமன்ற அலுவலர்கள், வழக்கறிஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# மீன் குஞ்சுகள் கொள்முதல் செய்வதற்கு 50 சதவீதம் மானியம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

**ஊட்டி, ஜூன்.30-**

50 சதவீத மானியத்தில் மீன் குஞ்சுகள் கொள்முதல் செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

நீலகிரி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் மீன் வளர்ப்பு தொழில் செய்து வரும் விவசாயிகள் தங்கள் மீன் பண்ணைகளை பதிவு செய்து அரசு மானியத் திட்டங்களை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சரால் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் பதிவுப் பெற்ற மீன் பண்ணைகளுக்கு மீன் குஞ்சுகள் கொள்முதல் செய்வதற்கு உள்ளீட்டு மானியம் வழங்கப்படும் என நடப்பு 2025-26 ஆண்டிற்கான சட்டமன்றக் கூட்டத் தொடரில் மீன் வளத்துறை மானியக் கோரிக்கையில் அறிவிப்பு வெளியிடப் பட்டது.

இதனைத்தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில், மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் பதிவுப் பெற்று மீன் வளர்ப்பு தொழில் செய்து வரும் மீன் வள விவசாயிகளுக்கு உள்ளீட்டு மானியமாக 1 ஹெக்டேருக்கு 10,000 எண்ணம் மீன் குஞ்சுகள் கொள்முதல் செய்வதற்கு 50 சதவிகித மானியம் வழங்கப்படவுள்ளது.

எனவே, இத்திட்டத்தின் கீழ், மீன் குஞ்சுகள் கொள்முதல் செய்வதற்கான உள்ளீட்டு மானியத்தினை பெற்று பயனடைய விரும்பும் பயனாளிகள் ஊட்டியில் அமைந்துள்ள மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை, உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு நேரில் அல்லது 0423 - 2443946 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறது. இத்தகவலை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# டென்சிங் நார்கே தேசிய சாகச விருது பெற விண்ணப்பங்கள் வரவேற்பு: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

**ஊட்டி, ஜூன்.30-**

இந்திய அரசின் 2024-ம் வருடத்திற்கான 'டென்சிங் நார்கே தேசிய சாகச விருது' வழங்கிட விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகிறது.

இது தொடர்பாக நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

இந்திய அரசு, ஆண்டு தோறும் ஒருவருக்கு நிலம், நீர் (சமுத்திரம்) மற்றும் ஆகாயத்தில் உயிர் காக்கும் சாகச சாதனை புரிந்தவர்களை கௌரவிக்கும் பொருட்டு 2024-ம் வருடத்திற்கான 'டென்சிங் நார்கே தேசிய சாகச விருது'க்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி வருகிறது.

அதன்படி, 2024-ம் வருடத்திற்கான டென்சிங் நார்கே தேதிய சாகச விருதுக்கான விண்ணப்பங்கள் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை 30.06.2025-ம் தேதிக்குள் மேற்குறிப்பிட்ட இணைய தளத்திலேயே நேரடியாக பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்

# ஈரோடு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் துவக்க விழா



**ஈரோடு ஜூன் 30-**

ஈரோடு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2025 26 ஆம் ஆண்டிற்கான முதலாமாண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் துவக்க விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு ஸ்ரீநந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினரான . எஸ். பானுமதி சண்முகன் மற்றும் சிறப்பு விருந்தினர் பீனிக்ஸ் பயிற்சி அகாடமியின் தலைவர் முனைவர் எம். சண்முகசுந்தரம் ஆகியோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையேற்று பேசியதாவது, மாணவர்களின் நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு அவர்களின் குடும்ப நலனுக்காக ஆண்டு தோறும் நந்தா கல்வி உதவிக்கான தேர்வுகள் நடத்தப்பட்டு, தோச்சி அடிப்படையில் 25% கட்டணச்சலுகை வழங்கப்பட்டு வருவதாக கூறினார். மேலும் டி.என்.பி.எஸ்.சி. வங்கி தேர்வு, ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். போன்ற பயிற்சி வகுப்புகள் திறமையான பேராசியர்களை கொண்டு இலவசமாக மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ்.மனோகரன் வரவேற்றார் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி மற்றும் முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு புதிய மாணவர்களையும், அவர்தம் பெற்றோர்களையும் வரவேற்று, வாழ்த்திப் பேசினார்கள். இதனை தொடர்ந்து, பீனிக்ஸ் பயிற்சி அகாடமியின் தலைவர் முனைவர் எம். சண்முகசுந்தரம் சிறப்புரையாற்றினார் .இவ்விழானை ஏற்பாடு செய்திருந்த கல்லூரியின் நிர்வாக அலுவலர் முனைவர். வி.சி. சீனிவாசன், துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோரை கல்லூரி நிர்வாகத்தினர்கள் பாராட்டினார்கள்.

# நீலகிரியில் 21,650 கால்நடைகளுக்கு 7-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி

## வரும் 2- ந்தேதி முதல் நடக்கிறது

**ஊட்டி, ஜூன்.30-**

நீலகிரியில் 21,650 கால்நடைகளுக்கு 7-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி வரும் 2- ந்தேதி முதல் நடக்கிறது. இது தொடர்பாக மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

கால்நடைகளை நோயின்றி பேணிக்காப்பது கால்நடை வளர்ப்போரின் முக்கிய கடமையாகும். மாடுகளில் ஏற்படும் வியாதிகளில் மிககொடிய, பெரும் அளவில் கால்நடைகளை தாக்கும் நோய் கோமாரி நோய் என்பது குறிப்பிடத்தக்கது.

நீலகிரி மாவட்டத்தில், உள்ள சுமார் 21,650 பசு மற்றும் எருமையினங்களை அந்நோயிலிருந்து காக்கும் வண்ணம் கால்நடை பராமரிப்பத்துறை சார்பில், 7வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி கால்நடைகளுக்குப் (மாட்டினம் (ம) எருமையினம்) போடும் பணி 02.07.2025 முதல் 31.07.2025 வரை நடைபெற உள்ளது.

இதற்காக நீலகிரி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர் மற்றும் ஒரு கால்நடை பராமரிப்பு உதவியாளர்களை கொண்டு 22 தடுப்பூசி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தங்களது கிராமத்தில், எந்த நாளில் தடுப்பூசி பணி நடைபெறும் என்ற விவரத்தினை முன்கூட்டியே சம்மந்தப்பட்ட கால்நடை மருந்தகத்தால் அக்கிராமத்திற்கு தெரிவிக்கப்படும் அல்லது பொது மக்கள் தங்கள் பகுதி கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம் அல்லது கால்நடை கிளை நிலையங்களை தொடர்பு கொண்டு தெரிந்துக்கொள்ளலாம்.

கோமாரி நோய் தடுப்பூசி போடும் நாளில் விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்குத் தவறாது தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஊத்தங்கரையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர குழு 15 வது மாநாடு

## எம்எல்ஏ ராமச்சந்திரன் பங்கேற்பு



**கிருஷ்ணகிரி,ஜூன்.30-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஊத்தங்கரை நகர குழு 15 வது மாநாடு கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் இலகுமையா கலந்து கொண்டு மாநாடு கொடியேற்றி தலைமை குழு தேர்வு செய்தார். தளி சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான ராமச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் நகர செயலாளர் ஆனந்தன், வேலை அறிக்கை மாநில குழு சின்னசாமி, பழனி, கண்ணு ஆகியோர் அறிக்கை மீது விவாதம் தொகுப்புரையில் பங்கேற்றனர்.

லோகநாதன், சத்தியராஜ், காமராஜ், பாத்திமா பீவி, பாபு என்கிற ஆமத்அலி, சிவரஞ்சனி, சர்தார், முனாப், மணிகண்டன், வினோத், பெருமாள் உள்ளிட்ட ஏராளமான கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நகர பொருளாளர் குமார் நன்றியுரை ஆற்றினார்.




**கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டம், தொட்டமஞ்சி ஊராட்சி, தமிழகத்தின் எல்லைபகுதியான பிலிகுண்டுலு காவிரி ஆற்றில் சுமார் 57 ஆயிரம் கன அடி தண்ணீர் செல்வதையடுத்து கிருஷ்ணகிரி கலெக்டர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டார். உடன் வட்டாட்சியர் கோகுல்நாத் மற்றும் மத்திய நீர்வளத்துறை உதவி பொறியாளர், வனத்துறை அலுவலர்கள் உள்ளனர்.**

# ஒகேனக்கல் கரையோர பகுதிகளில் காவல் ஆய்வாளர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் டிரோன் கேமரா மூலம் ஆய்வு



**தர்மபுரி,ஜூன்.30-**

தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து ஐந்து நாட்களாக தொடர்ந்து அதிகரித்து காணப்பட்ட நிலையில் படிப்படியாக குறைந்து தற்போது வினாடிக்கு 50 ஆயிரம் கன அடியாக உள்ளது இந்த நீர் வரத்து காரணமாக சுற்றுலா பயணிகள் அருவி மற்றும் மாற்றுப் பகுதிகளில் குளிக்கவும் பரிசல் சவாரி மேற்கொள்ளவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறை நாள் என்பதால் சுற்றுலா பயணிகள் பேருந்து மூலம் ஒகேனக்கல் சுற்றுலா தளத்திற்கு வருகை புரிந்தனர். இதனை தொடர்ந்து பென்னாகரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சக்திவேல், லோகநாதன் மற்றும் ஒகேனக்கல் காவல் ஆய்வாளர் முரளி ஆகியோர் ட்ரோன் கேமரா மூலம் கரையோர பகுதிகளில் சுற்றுலாப் பணிகள் யாரேனும் குளிக்கின்றனரா என்று கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த கண்காணிப்பு பணியின் போது கூத்தப்பாடி ஊராட்சி செயலாளர் குமரன் மற்றும் காவல் துறையினர் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# மஞ்சம்பட்டியில் திமுக நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்




**புதுக்கோட்டை,ஜூன்.30-**

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மங்களா கோவில் பரமசிவம் தலைமை வகித்தார் நிகழ்ச்சிக்கு முன்னதாக ஒன்றிய இளைஞரணி செயலாளர் கலையரசன் அனைவரையும் வரவேற்றார் மாவட்ட இளைஞரணி செயலாளர் சண்முகம் பொதுக்குழு உறுப்பினர் கீரை தமிழ் ராஜா மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர் தலைமை கழகப் பேச்சாளர் மதுமிதா முரளி ஆகியோர் கலந்து கொண்டே திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனைகளை விளக்கி பேசினார் கூட்டத்தில் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ராஜா ஆத்ம சேர்மன் நியூஸ் ராஜேந்திரன் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தவசிமணி மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எம் எம் முருகேசன் தெற்கு ஒன்றிய ஒன்றிய பொருளாளர் நெப்புகை சரவணன் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அழகு பிரகாஷ் சுரேஷ் முன்னாள் மட்டங்கால் ஊராட்சி மன்ற தலைவர் செல்லப்பிள்ளை மருங்கூரணி முருகேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து ஏரிகளுக்கு தண்ணீர்

## அமைச்சர் இரா.ராஜேந்திரன் திறந்து வைத்தார்



**சேலம்,ஜூன்.30-**

மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, சேலம் மாவட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி ஆகியோர் முன்னிலையில் ஏரிகளுக்கு (29.06.2025) தண்ணீர் திறந்து வைத்தார்கள். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் 12.06.2025 அன்று டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட நீரானது 15.06.2025 அன்று கல்லணை வந்தவுடன் கல்லணை மதகுகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்து தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்திட வேண்டுமென விவசாயிகளுக்குஅறிவுறுத்தினார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் 2021, 2022, 2024 மற்றும் 2025 (இன்றையதினம்) ஆகிய 4 நீர் பாசன ஆண்டுகளில் மேட்டூர் அணையானது முழு கொள்ளளவை எட்டியுள்ளது. இதன் தொடர்ச்சியாக மேட்டூர் அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும், கிடைக்கும் உபரிநீரை குளங்கள், ஏரிகள் மற்றும் சரபங்கா போன்ற திட்டங்களுக்கு திருப்பி விட்டு நீரை சேமித்திடவும் தமிழ்நாடு அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, இன்றையதினம் மேட்டூர் அணையிலிருந்து காவிரி உபரிநீரை நீரேற்று மூலம் ஏரிகளுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கும் வகையில் தண்ணீர் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணையின் வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கும் திட்டம் ரூ.673.88 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேட்டூர் அணையானது அதன் முழு கொள்ளளவான 120 அடியினை எட்டும் பொழுது அணையின் இடது கரையின் நீர் பரப்பு பகுதியிலிருந்து வெள்ள உபரிநீரை திப்பம்பட்டி பிரதான நீரேற்று நிலையம், வெள்ளாளபுரம் துணை நீரேற்று நிலையம், கன்னந்தேரி துணை நீரேற்று நிலையம் மூலமாக 82 ஏரிகள், குளங்களுக்கு நீர் சென்றடையும் வகையில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, தற்பொழுது 57 ஏரிகளுக்கு நீர் வழங்கும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் 356 மில்லியன் கனஅடி நீர் நீரேற்றம் செய்யப்பட்டு, 3,364 ஏக்கர் நிலங்கள் பாசனம் மற்றும் குடிநீர் வசதி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் மேட்டூர், ஓமலூர், எடப்பாடி மற்றும் சங்ககிரி வட்டங்களில் 32 கிராமங்களில் உள்ள 11 நீர் வளத்துறை ஏரிகள், 2 நகராட்சி ஏரிகள், 3 பேரூராட்சி ஏரிகள் மற்றும் 41 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் நீர் நிரம்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, காவிரி உபரிநீரை ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நிரப்பும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், எம்.காளிப்பட்டி ஏரிக்கு நீர் வந்தடைந்ததை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மலர் தூவி வரவேற்றார்கள்.

முன்னதாக மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் வெளியேற்றப் படுவதை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பார்வையிட்டார்கள்.

இந் நிகழ்வின் போது, திருச்சி மண்டல நீர்வளத் துறை தலைமைப் பொறியாளர் தயாலகுமார், மேட்டூர் அணை கண்காணிப்பு பொறியாளர் சிவக்குமார், மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் பொ.சுகுமார், சரபங்கா வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் அப்புசாமி, மேட்டூர் அணை செயற் பொறியாளர் வெங்கடாசலம் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

# திருவள்ளுவருக்கு கோயில் கட்டும் பணி முழுமைபெற தமிழக அரசு உதவிட கோரிக்கை




**கிருஷ்ணகிரி,ஜூன்.30-**

கிருஷ்ணகிரியில் திருவள்ளுவர் நலசங்கம் ஆலோசனைக் கூட்டத்தில் திருவள்ளுவருக்கு கோயில் கட்டும் பணியை முழுமைப்படுத்த தமிழக அரசு உதவிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

கிருஷ்ணகிரியில் மாவட்ட திருவள்ளுவர் நலசங்கம் நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் வள்ளுவர் சங்கத்திற்கு உழைத்த மூத்த நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட தலைவராக ஜெகநாத், செயலாளராக நம்பிராஜ், பொருளாராக ஸ்ரீதர் துணை தலைவர் மணிகண்டன் ஆகியோர் பொறுப்பேற்றுக்கொண்டனர். இதனை தொடர்ந்து பர்கூர் அடுத்த ஜிஞ்சம்பட்டியில் திருவள்ளுவர் நலசங்கம் சார்பில் திருவள்ளுவருக்கு கோயில் எழுப்பட்டது. போதிய நிதி இல்லாததால், கோயில் கட்டும் பணி பல ஆண்டுகளாக பணி முழுமை பெறாமல் உள்ளது. இதனால் தமிழக அரசு கோயில் கட்டுவதற்கு நிதிவழங்கிட வேண்டும் மற்றும் உள் ஒதுக்கீடு உயர்த்தி வழங்கிட வேண்டும்.

# அரியாணிப்பட்டியில் கோயில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு முளைப்பாரி எடுப்பு விழா

**கந்தர்வகோட்டை,ஜூன்.30-**

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை அருகே அரியானிப்பட்டிகிராமத்தில்விநாயகர் ஸ்ரீ.பாலமுருகன் ஸ்ரீ உமா மகேஸ்வரர் ஸ்ரீ.உமா மகேஸ்வரி கோயில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு முளைப்பாரி எடுப்பு விழா நடைபெற்றது. இதில் 1000 கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்று முளைப்பாரியை தலையில் சுமந்தவாறு ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்*

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை அருகே அரியானிப்பட்டிபிரசித்தி பெற்ற பழமை வாய்ந்த ஸ்ரீ.விநாயகர் ஸ்ரீ.பாலமுருகன் ஸ்உமா மகேஸ்வரர் உமா மகேஸ்வரி கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் கும்பாபிஷேக விழா கடந்த நவருடங்களுக்கு முன்பு நடைபெற்றது. அதனை தொடர்ந்து கும்பாபிஷேக விழா நடைபெற உள்ளதுமாரியம்மன் காளியம்மன்கோயிலில் பெண்கள் ஒன்றிணைந்து ஒரே மாதிரியான உடை உடுத்தி முளைப்பாரியை வைத்து சுவாமி தரிசனம் செய்தனர் மேள தாளம் முழங்க குதிரை நடனமிட்டு காண்போரை கண் கவர செய்தது. இந்நிகழ்ச்சியில் அரியாணிபட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 1000 கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்று கும்மியடித்து மேள தாள இசை முழங்க முளைப்பாரியை தலையில் சுமந்தவாறு ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் திருவாரூர் வடக்கு மாவட்டம் அடியக்கமங்கலம் கிளை 2 சார்பில் மார்க்க விளக்க கூட்டம்

**திருவாரூர்,ஜூன்.30-**

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் மாநில தலைமை அறிவிப்பின் படி முன்மாதிரி முஸ்லிம் இளைஞர்கள் என்ற தலைப்பின் கீழ் நான்கு மாத செயல் திட்டத்தின் அடிப்படையில் பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.அதன் ஒரு பகுதியாக அடியக்கமங்கலம் கிளை 2 சார்பில் பள்ளி வளாகத்தில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கிளை தலைவர் முகமது ஹக் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக மாவட்ட அழைப்பாளர் ராஜ் முஹம்மது சிறப்புரையாற்றினர். அவர் கூறுகையில்,கல்வியின் அவசியம் குறித்து இஸ்லாமிய சமுதாயம் கல்வியில் அதிகம் கவனம் செலுத்திட வேண்டும் என்றும் திருக்குர்ஆன் அதிகமாக கல்வி கற்றலின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கின்றது என்றும்,சமுதாய முன்னேற்றத்திற்கு கல்வி மிக மிக அவசியமென்றும் கூறினார்.இளைய சமுதாயத்தினர் நல்லொழுக்கம் உள்ள மனிதராக சமுதாயத்தில் திகழ்வதற்கு கல்வி மிக மிக அவசியம் என்று கூறினார்.



**பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழப்பெரம்பலூர் ஆதிதிராவிடர் பகுதியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட60,000லிட்டர்கொள்ளளவுகொண்டபுதியமேல்நிலைநீர்த்தேக்கதொட்டியினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலெக்டர் ச.அருண்ராஜ் தலைமையில் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன் உள்ளார்.**

# முன்னுரிமை கடன்களுக்காக 2025-2026 நிதியாண்டிற்கு ரூ.25,331.32 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

## கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தகவல்

**தஞ்சாவூர்,ஜூன்.30-**

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் இந்த நிதி ஆண்டின் முதல் காலாண்டுக்கான மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் ஆய்வுக் கூட்டம் (27.06.2025) தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி முன்னிலையில் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மத்திய மாநில கடன் திட்டங்கள் தொடர்பாகவும் மாவட்டத்தின் வருடாந்திர கடன் இலக்கின் அம்சங்களையும் இக்கூட்டத்தில் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த நிதி ஆண்டில் அதிக கவனம் செலுத்த வேண்டிய திட்டங்கள் பற்றியும் எடுத்துரைக்கப் பட்டது.

மேலும் 2025-2026 நிதியாண்டில் வேளாண்மை துறை சார்ந்த பணிகளுக்கு 20,929.61 கோடி ரூபாயும், சிறு குறு தொழில் சார்ந்தது துறைக்கு 3391.1 கோடி ரூபாயும், கல்வித்துறைக்கு 50.78 கோடி ரூபாய் என 6 பிரிவுகளின் கீழ் தோராயமாக மொத்தம் 25331.32 கோடி ரூபாய் முன்னுரிமை கடன்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வங்கியாளர்கள் இந்த இலக்கினை 100% சதவீதம் பூர்த்தி செய்ய வேண்டும் என கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், வங்கியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிழ்ச்சியில், மத்திய ரிசர்வ் வங்கியின் உதவி பொது மேலாளர் ஸ்ரீதர், மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதுநிலை மண்டல மேலாளர் வெங்கடசுப்பிரமணியன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பிரதீப் கண்ணன் மற்றும் வங்கிகளின் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS
(Appellate Jurisdiction)
Tr.C.M.P.No. 1292 of 2024
& C.M.P.No.27928 of 2024

S.Preethi (F/28years)
W/o. Sebastin
No.7, 4th Cross Street,
1st Street, Sabi Nagar,
Muththaputhupettai,Avadi,
Chennai-600 055.
...Petitioner

-Vs-

Sebastin(M/33 years)
S/o Arokiyasamy,
No.55/105,Appasamy Chettiar Colony,
Peramanoor Main Road,
Salem-636007
...Respondent

MEMO OF NOTICE
To:THE RESPONDENT
Sebastin(M/33 years )
S/o Arokiyasamy,
No.55/105,Appasamy Chettiar Colony, Peramanoor Main Road,
Salem-636007

Take notice that the Petitioner had filed the above Transfer CMP for before the Hon'ble High Court seeking to withdraw the case in I.D.O.P.No.789 of 2023, pending on the file of Learned Family Court, Salem and to transfer the same on the file of Learned Sub-Ordinate Court at Ambattur Chennai. And you are requested to appear in person or through your pleader on 08.07.2025 before the Hon'ble High Court of Madars and failing which the matter will be decided on merits

T.LAVANYA
Advocate, Pondicherry

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within Three months thereafter, I, **NANDHINI .S**, D/o. **P. Sasikumar**, Date of Birth : **31-12-2002**, Permanently residing at **8/1M, Bharathi Nagar, Kallikadu, Chinna Thirupathy Po, Salem District, Tamil Nadu - 636 008** intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**NANDHINI .S**

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within Three months thereafter, I, **ROSHNI FATHIMA .S, D/o. M. AHAMED SHAHJAHAN,** aged 22 years, permanently residing at **D.No. 33/11, CHOLAN WEST STREET, AMMAPET, SALEM Dt, Tamil Nadu-636001.** Intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**ROSHNI FATHIMA .S**

**பொது அறிவிப்பு**

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், புதுப்பாளையம் கிராமம், சரஸ்வதி பள்ளி அருகில், குடியிருக்கும் பெரியசாமி மகன் P. தங்கராஜ் (வயது 58) மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 25-02-2025 ஆம் தேதி புதுப்பாளையத்தில் உள்ள எனது வீட்டிலிருந்து வாழப்பாடி பேருந்து நிலையம் அருகே உள்ள ஜெராக்ஸ் கடையில் எனது வீட்டுப் பத்திரத்தின் நகல் எடுக்க மற்றும் கம்ப்யூட்டர் பட்டா, ஆதார் அட்டை, வாழப்பாடி ஆக்ஸிஸ் வங்கியின் பாஸ் புக், காசோலை புக், காசோலை எண். 008621 முதல் 008640 உள்ளவற்றில் சுமார் 10 காசோலைகள் அனைத்தும் ஒரு கவரில் வைத்து எனது இரு சக்கர வாகனத்தில் சென்று ஜெராக்ஸ் எடுத்து விட்டு வாகனத்தில் முன்னால் பையில் மாட்டிக் கொண்டு வீட்டிற்கு வந்து பார்த்தபோது அதனை காணவில்லை. மீண்டும் 4 நாட்களாக வந்த வழியில் எங்கு தேடியும், பார்த்தும் கிடைக்கவில்லை. யாரேனும் எனது அசல் ஆவணங்கள் மற்றும் இதர ஆவணங்களை கண்டெடுத்தால், எனது முகவரிக்கோ (அ) வாழப்பாடி காவல் நிலையத்திற்கோ தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு : **P. தங்கராஜ்,** த/பெ. பெரியசாமி, சரஸ்வதி பள்ளி அருகில், புதுப்பாளையம் கிராமம், வாழப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.

## டி-20 போட்டிகளில் அதிக வெற்றி:
# ஆஸ்திரேலிய அணி சாதனையை சமன் செய்த இந்திய மகளிர் அணி



**நாட்டிங்காம், ஜூன் 30-**

நாட்டிங்காமில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டி 20 போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம், அதிக வெற்றிகள் பெற்ற ஆஸி. சாதனையை இந்திய மகளிர் அணி சமன் செய்தது.

**210 ரன்கள் குவிப்பு...**

இந்திய மகளிர் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர், 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகிறது. இரு அணிகள் மோதும் முதல் டி 20 போட்டி நேற்று முன்தினம் நடந்தது. டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் களமிறங்கிய இந்திய மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 210 ரன்கள் குவித்தது. கேப்டன் ஸ்மிருதி மந்தனா அதிரடியாக ஆடி சதம் கடந்தார். அவர் 62 பந்தில் 3 சிக்சர், 15 பவுண்டரி உள்பட 112 ரன்கள் குவித்தார். இங்கிலாந்து சார்பில் லாரன் பெல் 3 விக்கெட் வீழ்த்தினார்.

**இந்தியா அபார வெற்றி...**

இதையடுத்து, 211 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 14.5 ஓவரில் 113 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் 97 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்று டி20 தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

**சாதனையை சமன் செய்தது...**

இந்த வெற்றியின் மூலம் சர்வதேச மகளிர் டி20 போட்டிகளில் 2-வது அதிகபட்ச வெற்றிகளை பெற்ற அணி என்ற ஆஸ்திரேலியாவின் சாதனையை இந்திய அணி சமன் செய்தது. 216 வெற்றிகளுடன் இங்கிலாந்து முதலிடத்தில் உள்ளது.

## 3 விதமான போட்டிகளிலும் சதம்:
# ஸ்மிருதி மந்தனா சாதனை



**நாட்டிங்காம், ஜூன் 30-**

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டி20 போட்டியில் சதம் விளாசியதன் மூலம், 3 விதமான போட்டிகளிலும் சதம் அடித்த முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை ஸ்மிருதி மந்தனா படைத்தார்.

**மந்தனா அதிரடி சதம்...**

இந்திய மகளிர் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. இரு அணிகள் மோதும் முதல் டி 20 போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இப்போட்டியில் முதலில் பேட்டிங் செய்த இந்திய மகளிர் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 210 ரன்கள் குவித்தது. கேப்டன் ஸ்மிருதி மந்தனா அதிரடியாக ஆடி சதம் கடந்தார். அவர் 62 பந்தில் 3 சிக்சர், 15 பவுண்டரி உள்பட 112 ரன்கள் குவித்தார்.

**இந்தியா வெற்றி...**

இதையடுத்து, 211 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 14.5 ஓவரில் 113 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் 97 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்று டி20 தொடரில் 1-0 என முன்னிலை பெற்றது.

**சாதனை...**

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டி20 போட்டியில் சதம் விளாசியதன் மூலம், கிரிக்கெட் போட்டியின் ஒருநாள், டெஸ்ட், டி20 தொடர்களில் சதம் அடித்த இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் முதல் வீராங்கனை என்ற சாதனையை ஸ்மிருதி மந்தனா படைத்தார். உலகளவில் 3 போட்டிகளிலும் சதம் அடித்த வீராங்கனைகளின் வரிசையில் ஸ்மிருதி மந்தனா 5வது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'செக்மேட்' செய்யமுடியாத எதிர்காலம்:
# பிரக்ஞானந்தாவுக்கு முதல்வர், துணை முதல்வர் வாழ்த்து



**சென்னை, ஜூன் 30-**

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற செஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற உஸ்செஸ் மாஸ்டர்ஸ் கோப்பை 2025-ல், தமிழகத்தை சேர்ந்த செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டம் வென்றார். அவருக்கு வாழ்த்து தெரிவித்து முதல்வர், துணை முதல்வர் உள்ளிட்டோர் தங்களது வாழ்த்துக்களை பகிர்ந்துள்ளனர்.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட வாழ்த்து செய்திகளில் கூறியிருப்பதாவது: உஸ்செஸ் மாஸ்டர்ஸ் கோப்பை 2025-ல் வென்றதற்கும் அதன் மூலம் கிளாசிக்கல் வீரர் தரவரிசையில் இந்திய அளவில் முதலிடத்தைப் பிடித்ததற்கும், லைவ் ரேட்டிங் மதிப்பீட்டில் உலகில் 4-வது வீரராக உயர்ந்ததற்கும் பிரக்ஞானந்தாவுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றிப் பாதையில் தொடரும் வகையிலான அவரது கரங்களில் செக்மேட் செய்யமுடியாத எதிர்காலம் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்ட வாழ்த்து செய்தியில், உஸ்செஸ் மாஸ்டர்ஸ் கோப்பை 2025-ஐ வென்றதன் மூலம், பிரக்ஞானந்தா, மீண்டும் ஒரு முறை செஸ் உலகில் பெரும் அலையை ஏற்படுத்தியிருக்கிறார். பிரக்ஞானந்தாவின் சாதனைகள் பெருமையளிக்கிறது. அவரது வெற்றிகள் மென்மேலும் தொடரட்டும் என்று தெரிவித்துள்ளார்.

# திட்டமிட்டபடி ஆசியக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெறுமா?

## பாகிஸ்தான் புதிய 'ரூட்'



**இஸ்லாமாபாத்,ஜூன் 30-**

திட்டமிட்டபடி ஆசியக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெறாத பட்சத்தில், ஆப்கானிஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸை உள்ளடக்கிய முத்தரப்பு தொடரை ஏற்பாடு செய்ய பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் முயன்று வருகிறது.

**பஹல்காம் தாக்குதல்...**

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பகுதியில், கடந்த ஏப்ரல் 22ஆம் தேதி பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்திய ராணுவம் பதிலடி கொடுத்தது. இதற்கு இந்திய எல்லைகள் மீது பாகிஸ்தான் ராணுவம் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை ஏவியது. இதையும் இந்திய ராணுவம் முறியடித்தது.

**புறக்கணிக்கக்கூடும்...**

இதற்கிடையே இருதரப்பில் பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் செய்யப்பட்டு, தாக்குதல் நிறுத்தப்பட்டது. எனினும், இந்த விவகாரம் தொடர்பாக இருதரப்பு உறவிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. தவிர, சிந்து நதி நீர் ஒப்பந்தம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருட்கள் உள்ளிட்டவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேபோல், இருதரப்பிலான கிரிக்கெட் தொடர்களும் இனி நடைபெறாது எனக் கூறப்பட்டுள்ளது. மேலும், ஆசிய கிரிக்கெட் கவுன்சில் மற்றும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நிகழ்வுகளில் பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் போட்டிகளையும் பி.சி.சி.ஐ. புறக்கணிக்கக்கூடும் எனத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

**ஆசியக் கோப்பை...**

இருப்பினும், 2025ஆம் ஆண்டு ஆசியக் கோப்பை திட்டமிட்டபடி நடக்க வாய்ப்புள்ளதாகத் தற்போதைய செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த வகையில், ஆசிய கிரிக்கெட் கவுன்சில் செப்டம்பர் மாதம் போட்டியை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதில் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான், இலங்கை மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய அணிகள் பங்கேற்கின்றன. அதேநேரத்தில், இதுகுறித்து இன்னும் உறுதியான முடிவுகள் எதுவும் இறுதி செய்யப்படவில்லை

**ஜூலைமுதல்வாரத்தில்...**

என்றாலும், அடுத்த வாரம் முறையான முடிவு எடுக்கப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளன.

மேலும், ஆறு அணிகள் கொண்ட போட்டிக்கான அட்டவணையை ஜூலை முதல் வாரத்தில் வெளியிட ஆசிய கிரிக்கெட் கவுன்சில் நம்பிக்கை கொண்டுள்ளது. அப்போது அணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. போட்டிக்கான விளம்பர நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன. இதில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முன்னணியில் உள்ளது. இருப்பினும் கலப்பின வடிவத்தில் இதை நடத்துவது குறித்து சில விவாதங்களும் உள்ளன.

**முத்தரப்பு தொடர்...**

முதலில், இந்தியா 2025 ஆசியக் கோப்பையை நடத்தும் நாடாக இருந்தது. ஆனால் பாகிஸ்தானுக்கு எதிரான பதற்றங்கள் ACC புதிய போட்டியாளரைத் தேட வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. முன்னதாக லீட்ஸில் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் போது, 2025 ஆசியக் கோப்பையின் விளம்பர வீடியோ சமூக ஊடகங்களில் வைரலானது. ACC தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் மொஹ்சின் நக்வி தலைமையில் உள்ளது. சமீபத்தில், ஆசியக் கோப்பை ரத்து செய்யப்பட்டாலோ அல்லது ஒத்தி வைக்கப்பட்டாலோ ஆகஸ்ட் மாதம் ஐக்கிய அரபு எமிரேட்ஸை உள்ளடக்கிய முத்தரப்பு தொடரை ஏற்பாடு செய்ய பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அதன் ஆப்கானிஸ்தான் சகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

## ஹாக்கி: ஒரே பிரிவில் இந்தியா, பாக்.

14-வது ஜூனியர் (21 வயதுக்கு உட்பட்டோர்) உலகக் கோப்பை ஹாக்கி போட்டி சென்னை மற்றும் மதுரையில் வரும் நவம்பர் 28-ம் தேதி முதல் டிசம்பர் 10-ம் தேதி வரை நடக்கிறது. இந்தப் போட்டியில் பங்கேற்கும் 24 அணிகள் 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை எந்தெந்த பிரிவில் இடம்பெற வேண்டும் என்பதை குலுக்கல் மூலம் நேற்று முன்தினம் சர்வதேச ஹாக்கி சம்மேளனம் முடிவு செய்தது. 'ஏ' பிரிவு: நடப்பு சாம்பியன் ஜெர்மனி, தென் ஆப்பிரிக்கா, கனடா, அயர்லாந்து 'பி' பிரிவு: முன்னாள் சாம்பியன்களான இந்தியா, பாகிஸ்தான், சிலி, சுவிட்சர்லாந்து 'சி' பிரிவு: முன்னாள் சாம்பியன் அர்ஜென்டினா, நியூசிலாந்து, ஜப்பான், சீனா 'டி' பிரிவு: ஸ்பெயின், பெல்ஜியம், எகிப்து, நமீபியா 'இ' பிரிவு: நெதர்லாந்து, மலேசியா, இங்கிலாந்து, ஆஸ்திரியா 'எப்' பிரிவில் பிரான்ஸ், ஆஸ்திரேலியா, தென் கொரியா, வங்காளதேச அணிகளும் இடம்பிடித்துள்ளன.

## டெஸ்ட்: தென்னாப்பிரிக்கா ரன் குவிப்பு

தென்னாப்பிரிக்கா மற்றும் ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி குயின்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் திடலில் நேற்று முன்தினம் (ஜூன் 28) தொடங்கியது. இந்தப் போட்டியில் டாஸ் வென்று முதல் இன்னிங்ஸில் விளையாடிய தென்னாப்பிரிக்க அணி, முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 418 ரன்கள் எடுத்தது. அந்த அணியில் அறிமுக வீரர்களாக களமிறங்கிய லுஹான் டி பிரிட்டோரியஸ் மற்றும் டெவால்ட் பிரீவிஸ் சிறப்பாக விளையாடி ரன்கள் குவித்தனர்.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் குவித்திருந்த 418 ரன்களுடன் தென்னாப்பிரிக்க அணி டிக்ளேர் செய்ய, ஜிம்பாப்வே அணி அதன் முதல் இன்னிங்ஸில் விளையாடி வருகிறது. இரண்டாம் நாள் உணவு இடைவேளையின்போது, ஜிம்பாப்வே அணி அதன் முதல் இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 94 ரன்கள் எடுத்துள்ளது. 23 ரன்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை இழந்த நிலையில், சீன் வில்லியம்ஸ் மற்றும் கேப்டன் கிரைக் எர்வின் நிதானமாக விளையாடி ரன்கள் குவித்து வருகின்றனர்.

## வீரர்களுடன் சண்டையிட்ட பயிற்சியாளர்

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்து அணி கடைசி நாளில் 373 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் இந்தியாவின் பந்துவீச்சு கடுமையாக விமர்சிக்கப்பட்டது. அடுத்த போட்டி ஜூலை 2ஆம் தேதி தொடங்குகிறது. இந்நிலையில், 2-ஆவது டெஸ்ட் போட்டிக்கு முன்பாக பயிற்சி எடுத்துவரும்போது இந்திய வீரர்களுடன் பந்துவீச்சுப் பயிற்சியாளர் சண்டையிட்ட விடியோ காட்சிகள் கவனம் ஈர்த்துள்ளன.

இதில் இவர்கள் நிஜமாகவே அடித்துக்கொள்ளவில்லை, டபிள்யூ.டபிள்யூ.இ. விளையாட்டைப் போல கிண்டலாக நடித்து வந்தார்கள். இந்த சம்பவத்தை விடியோவாக எடுத்த ரே ஸ்போர்ட்ஸ் கிரிக்கெட் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளது. அதில், "வலைப்பயிற்சியில் என்டர்டெயின்மென்ட் இருக்காது என யார் கூறியது?" எனக் கிண்டலாகப் பதிவிட்டுள்ளது. சமூக வலைதளங்களில் இந்த விடியோ வைரலாகி வருகிறது.

## டிராவிஸ் ஹெட் வரலாற்றுச் சாதனை

ஆஸி. அணி கடந்த உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் தோற்றது. தற்போது, மே.இ.தீ. அணியுடன் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. பார்படாஸில் தொடங்கிய தொடரில் முதல் போட்டியில் ஆஸி. அணி 159 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. 2-ஆவது இன்னிங்ஸில் ஹேசில்வுட்டின் 5 விக்கெட் எடுத்தது வெற்றிக்கு வித்திட்டது. இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 59, 2-ஆவது இன்னிங்ஸில் 61 என அசத்திய டிராவிஸ் ஹெட் ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டிகளில் அதிக முறை ஆட்ட நாயகன் விருது வென்றவர்களில் முதலிடத்தில் உள்ள டிராவிஸ் ஹெட் 10 முறை என்ற மைல்கல்லை எட்டியுள்ளார். 50 போட்டிகளில் டிராவிஸ் ஹெட் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். 2-ஆம் இடத்தில் ஜோ ரூட் 5 முறை 65 போட்டிகளில் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## பி.சி.சி.ஐ. வெளியிட்ட விடியோ

கடந்தாண்டு இதே தேதியில் இந்திய ஆடவர் அணி தென்னாப்பிரிக்காவை வீழ்த்தி டி20 உலகக் கோப்பையை வென்றது. சுமார் 17 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவுக்கு ஐசிசி கோப்பை கிடைத்த மகிழ்ச்சியில் இந்திய ரசிகர்கள் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தார்கள். ரோஹித் சர்மா தலைமையில் இந்திய அணி இந்தக் கோப்பையை வென்றது. இந்தப் போட்டியில் 30 பந்துகளுக்கு 30 ரன்கள் தேவையானதாக இருந்தது. தென்னாப்பிரிக்க அணிக்கு எளிதான வெற்றியாகவே இருந்தது. இந்தியாவின் பந்துவீச்சாளர்கள் பும்ரா, ஹார்திக் பாண்டியாவின் சிறப்பான செயல்பாடுகளால் கோப்பை வென்றது. குறிப்பாக பாண்டியா ஓவரில் சூர்யகுமார் யாதவ் எல்லைக் கோட்டுக்கு அருகில் கேட்ச் பிடித்ததை யாருமே மறக்க மாட்டார்கள். பி.சி.சி.ஐ. இந்த கேட்ச்சுடன் தொடங்கும் காட்சியுடன் விடியோ வெளியிட்டு ஜூன் 29, 2024 ஞாபமிருக்கிறதா எனப் பதிவிட்டுள்ளது. இந்த விடியோ சமூக வலைதளங்களில் கவனம் ஈர்த்து வருகிறது.

## வரும் சட்டமன்ற தேர்தலில்
# அ.தி.மு.க. தனி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்: இ.பி.எஸ். உறுதி

**சென்னை, ஜூன் 30-**

வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்று உளுந்தூர்பேட்டையில் அ.தி.மு.க. சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். அ.தி.மு.க.வை எந்த கொம்பனாலும் கபளீகரம் செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உளுந்தூர்பேட்டையில் அ.தி.மு.க. சார்பில் நேற்று மாலை பொதுக்கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசுகையில், அ.தி.மு.க. இத்துடன் முடிந்துவிட்டது என்று ஸ்டாலின் சொல்கிறார். ஸ்டாலின் பகல் கனவு காண்கிறார். அ.தி.மு.க.வின் வெற்றிக்கு இங்கு குவிந்திருக்கும் சிப்பாய்களை பாருங்கள்.

இங்குள்ள ஒவ்வொருவரும் 25 வாக்குகளை அ.தி.மு.க. வேட்பாளருக்கு பெற்று கொடுக்க வேண்டும்.

நமக்கு கூட்டணி பலமானதாக அமையும். யாரும் கவலைப்பட வேண்டாம். முதற் கட்டமாக பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்துள்ளோம். பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்ததில் இருந்து ஸ்டாலின் பதற்றமாக இருக்கிறார். அ.தி.மு.க. யாருடன் கூட்டணி வைத்தால் உங்களுக்கு என்ன?

பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்ததை ஸ்டாலினால் பொறுக்க முடியவில்லை. பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்ததன் நோக்கம், நமது வேட்பாளருக்கு வாக்குகள் சிதறாமல் கிடைக்க வேண்டும். தி.மு.க. ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்பதற்காக கூட்டணி வைத்துள்ளோம். அ.தி.மு.க.வை பா.ஜ.க. கபளீகரம் செய்துவிடும் என்று சொல்கிறார்கள். அ.தி.மு.க. பொன் விழா கண்ட கட்சி.

ஒவ்வொரு தொண்டரின் உடலிலும் ஓடுவது அ.தி.மு.க.வின் ரத்தம். எம்.ஜி.ஆர். மறைவுக்கு பின்பும் கூட, கருணாநிதியால் அ.தி.மு.க.வை வீழ்த்த முடியவில்லை. ஜெயலலிதா மறைவுக்கு பின் ஸ்டாலின் அ.தி.மு.க. ஆட்சியை கவிழ்க்க நினைத்தார். ஆனாலும் அ.தி.மு.க.வை வீழ்த்த முடியவில்லை. 2026 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வென்று தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியை அமைக்கும்.

எந்த கொம்பனாலும் அ.தி.மு.க.வை கபளீகரம் செய்ய முடியாது. தேர்தலில் எதிரிகளை ஓட ஓட விரட்டி வெற்றி பெற வேண்டும். அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியால் முதல்வர் ஸ்டாலினுக்கு பயம் வந்துவிட்டது. எடப்பாடி பழனிசாமி பொறுப்பேற்றதில் இருந்து அ.தி.மு.க 10 தேர்தல்களில் தோல்வியடைந்ததாக சொல்லி கொண்டிருக்கிறார் ஸ்டாலின். ஆனால் 2011 முதல் 2021 வரை எத்தனை முறை தோல்வியடைந்தீர்கள் என்பதை தி.மு.க. எண்ணி பார்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## மண்டை ஓடுகளை வைத்து,
# 2,500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் முகங்கள் வடிவமைப்பு

**சென்னை, ஜூன் 30-**

மண்டை ஓடுகளை வைத்து, 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் முகங்கள் வடிவமைப்பட்டு அதன் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

கீழடியில் கிடைத்த மண்டை ஓடுகளை வைத்து 2,500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் முகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. பிரிட்டனில் உள்ள ஆய்வகத்தில் 3 டி முறையில் இந்த இரண்டு முகங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. 80 சதவீத அறிவியல் 20 சதவீத கலையை பயன்படுத்தி இவை வடிவமைக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். கொந்தகை எனப்படும் கீழடி அருகிலுள்ள பகுதியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மண்டை ஓட்டிலிருந்து இம்முகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பேசிய முக உருவாக்க நிபுணரான பேராசிரியர் கேரோலைன் வில்கின்சன் கூறுகையில், "" கீழடி அருகே கொந்தகையில் கிடைத்த எலும்புக்கூடு, நரம்புகள், தசை மாதிரிகள் ஆகியவற்றின் அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டு கணினி உதவியுடன் இந்த முகங்களை உருவாக்கியுள்ளோம். முகத்தின் மேற்பகுதி அங்கு கிடைத்த தொன்மங்களில் அடிப்படையிலும், கீழே தாடை போன்ற பகுதிகள் தொழில்நுட்ப உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன. முக வடிவமைப்பில் தற்போதைய தென் இந்தியர்களின் படங்கள் மற்றும் மருத்துவ தரவுகள் ஆகியவற்றைக் கொண்டு தோல், கண்கள், முடி போன்றவற்றின் நிறமும் அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளன." என்றார்.

# டிரேடிங் முறையில் பரிமாற்றம்:
# சாம்சனுக்கு பதிலாக சிவம் துபேவை கேட்கும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி


- சஞ்சு சாம்சன்

**சென்னை, ஜூன் 30-**

சஞ்சு சாம்சனை ராஜஸ்தான் அணி சி.எஸ்.கே. அணிக்கு டிரேடிங் முறையில் கொடுக்கும் பட்சத்தில் அவருக்கு பதிலாக அதிரடி ஆல் ரவுண்டர் ஷிவம் துபேவை கேட்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

**சஞ்சு சாம்சன்...**

10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் கடந்த 3-ம் தேதி நிறைவு பெற்றது. இதன் இறுதிப்போட்டியில் பஞ்சாப் கிங்சை வீழ்த்தி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு கோப்பையை கைப்பற்றியது. இந்த சீசனில் சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 9-வது இடம் பிடித்து வெளியேறியது. இந்த சீசனில் பெரும்பாலான போட்டிகளை காயம் காரணமாக சஞ்சு சாம்சன் தவற விட்டார். சாம்சன் இல்லாத சமயத்தில் ரியான் பராக் அணியை வழிநடத்தினார்.

**விலக முடிவு...**

முன்னதாக இந்த சீசனில் ராஜஸ்தான் அணி நிர்வாகத்திற்கும் சஞ்சு சாம்சனுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டதாக தகவல் வெளியாகியது. அத்துடன் தலைமை பயிற்சியாளர் ஆன ராகுல் டிராவிட் - சஞ்சு சாம்சன் இடையேயும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்பட்டது. இதனால் அவர் அடுத்த சீசனுக்கு முன்னதாக ராஜஸ்தான் அணியிலிருந்து விலக முடிவெடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. அத்துடன் அவர் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இணைய உள்ளதாகவும் கூறப்பட்டது. இந்த சூழலில் சஞ்சு சாம்சனை டிரேடிங் முறையில் மாற்ற ராஜஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

**ஷிவம் துபே...**

அப்படி சஞ்சு சாம்சனை ராஜஸ்தான் அணி சி.எஸ்.கே. அணிக்கு டிரேடிங் முறையில் கொடுக்கும் பட்சத்தில் அவருக்கு பதிலாக அதிரடி ஆல் ரவுண்டர் ஷிவம் துபே மற்றும் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோரை கேட்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## ஸ்டீவ் ஸ்மித் விளையாடுவாரா?

மே.இ.தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள ஆஸி. அணி 3 டெஸ்ட், 5 டி20 போட்டிகளில் விளையாடவிருக்கிறது. பாரபடோஸில் நடந்த முதல் டெஸ்ட்டில் ஆஸி. அணி 159 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. அடுத்ததாக, 2-ஆவது டெஸ்ட் வரும் ஜூலை 3ஆம் தேதி செயிண்ட் ஜார்ஜியாவில் நடைபெறவிருக்கிறது. இந்நிலையில், ஸ்டீவ் ஸ்மித் தனது இன்ஸ்டா பக்கத்தில் நியூயார்க்கில் இருந்து பார்படோஸ் சென்ற புகைப்படத்தைப் பதிவிட்டுள்ளார்.

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் பவுமா கேட்சைப் பிடிக்க முயலும்போது கை விரலில் காயம் ஏற்பட்டது. அப்போது, ஆட்டத்தை விட்டு வெளியேறிய ஸ்மித் இப்போது வரை ஓய்வில்தான் இருக்கிறார்.

அடுத்த போட்டியில் ஸ்மித் விளையாடுவாரா என்ற கேள்விக்குப் பதிலளித்த ஆஸி. தலைமைப் பயிற்சியாளர் மெக்டொனால்டு, "அவரது விரல் எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்துதான். மற்றபடி அவர் நிச்சயமாக விளையாடுவார்" எனக் கூறினார்.

# காங்கிரஸ் கட்சி விழாவில் சுதீஷ்: பிரேமலதா விஜயகாந்த் விளக்கம்

**கோவை, ஜூன் 30-**

காங்கிரஸ் கட்சி விழாவில் தே.மு.தி.க. பொருளாளர் சுதீஷ் பங்கேற்றது குறித்து பிரேமலதா விஜயகாந்த் விளக்கமளித்துள்ளார்.

தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கோவை விமான நிலையத்தில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:- தமிழகம் முழுவதும் தே.மு.தி.க. சார்பில் பூத் கமிட்டி அமைக்கும் பணி வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. ஒரு மாதத்துக்கு பிறகு தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளேன். நான் ஏற்கனவே சொன்னது போல் கடலூரில் ஜனவரி 9-ந் தேதி மாநாடு நடக்கிறது. அன்றைய தினம் கூட்டணி குறித்து தெளிவாக அறிவிக்கப்படும்.

2026 சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் கூட்டணி ஆட்சி அமையும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளதை வரவேற்கிறோம். பல்வேறு மாநிலங்களில் கூட்டணி ஆட்சி சிறப்பாக நடக்கிறது. ஒரே கட்சியிடம் ஆட்சி அதிகாரம் இருக்க வேண்டியது இல்லை. காங்கிரஸ் கட்சி சார்பான விழாவில் சுதீஷ் கலந்து கொண்டது தவறு இல்லை. பல ஆண்டுகாலமாக, தொடரும் நட்பின் வெளிப்பாடாக சுதீஷ் விழாவில் கலந்து கொண்டார். இதற்கும் அரசியலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இதற்கும், கூட்டணிக்கும் சம்பந்தம் இல்லை.

போதைப்பொருள் இல்லாத, டாஸ்மாக் இல்லாத, கள்ளச்சாராயம் இல்லாத தமிழ்நாட்டை தி.மு.க. அரசு உருவாக்க வேண்டும். அ.தி.மு.க. தரப்பில் விருப்பம் இருந்தாலும் கூட்டணியில் இடம்பெறுவது பற்றி விஜய் தான் முடிவெடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஹமாஸ் இணை நிறுவனர் பலி

**டெல் அவிவ், ஜூன் 30-**

இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஹமாஸ் இணை நிறுவனர் கொல்லப்பட்டதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசாமுனை மீதான இஸ்ரேலின் போர் 2-வது ஆண்டை நெருங்கி உள்ளது. இதில் குழந்தை கள், பெண்கள் உள்பட 56 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

இந்நிலையில் காசாவின் சப்ரா பகுதியில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் இணை நிறுவனர் ஹகாம் முகமது இசா அல்-இசா கொல்லப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலை திட்டமிட்டு செயல்படுத்தியதில் அல்-இசா முக்கிய பங்கு வகித்ததாக இஸ்ரேல் தெரிவித்தது.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 30.06.2025 முதல் 06.07.2025 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி - இந்த வாரம் புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பண வருவாய் அதிகரிக்கும். அரசு வகையில் அதிக அளவு சகாயங்களை பெறுவீர்கள். புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் பணத்தைச் சேமிக்க முற்படுவீர்கள். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். தேர்வு முடிவுகள் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். பலவகைப் பயணங்களும் அதனால் இலாபமும் ஏற்படும். மாணவர்கள் தங்கள் பொன்னான நேரத்தை முகநூல் மற்றும் இணையதளங்களைப் பார்ப்பதில் வீணடிக்காமல், கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம்.

பரணி -

இந்த வாரம் எதிர்பாராத தன வரவு மூலம் ஏற்றம் காண்பீர்கள். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும் மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.-

இந்த வாரம் வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். உடல் நிலையை அலட்சியப்படுத்தாதீர்கள். எதிர்பாராத வரவு வரும் அளவுக்கு இன்று ஓர் அதிக சக்தி கொண்ட அருமையான வாரம். நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசீரிடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் தனவரவு அதிகரித்து, அந்தஸ்தும் உயரும். மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். கேளிக்கை மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். நண்பர்கள் அனுசரணையாக இருந்த போதிலும், அவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசுங்கள். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வழிமுறைகளை கையாண்டு வெற்றி அடைவீர்கள். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகளை புரிவார்கள். சிலரின் உடல் நலிவுறும். பெண்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

ரோகிணி –

இந்த வாரம் தாயின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். ஆயினும், அவர்களைச் சமாளிக்க, சரிக்கட்ட சாதுர்யமும், சாமர்த்தியமும் தேவைப்படும். உங்கள் மனதில் எழும் தொழில் தொடர்பான புதுப்புது யோசனைகள் காரணமாகவும், திறமையான நடவடிக்கைகள் மூலமாகவும், உங்களுக்கு உங்கள் எதிர்பார்ப்பை விட அதிக அளவுக்கு இலாபங்களை அள்ளித் தரும். வியாபாரத்தில் ஏற்படும் இடையூறுகளை தவிர்க்கப் பணியாளர்களை அனுசரித்துச் செல்லுங்கள். சிலருக்கு வீண் அலைச்சல்கள், வெட்டிச் செலவுகளும் தவிர்க்க முடியாத தாகும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். சிலரின் கற்பனை வளம் பெருகி, கதை, கவிதை எனத் திறம்பட எழுதிப் புகழ் பெறுவர். போட்டி, பொறாமை காரணமாக நண்பர்களே பகைவராவர். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். பிரயாணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள். இடம் விட்டு இடம் மாறி வேறு இடத்தில் வாழ நேரலாம். இலாபம் அதிகம் பெற புதிய விற்பனை யுக்திகளை கையாளுவீர்கள். சுறுசுறுப்பற்ற நிலையில் காரியத் தடைகள் ஏற்படும்.

## மிதுனம்

(மிருகசீரிடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் சௌகரியங்களையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். வாக்கால் நல்ல வருமானம் உண்டு. உறவுகளைச் சந்திப்பதால் மனமகிழ்ச்சி ஏற்படும். படுக்கை அறை சுகங்கள் மற்றும் நல்ல, ருசியான உணவு ஆகியவையும் கிடைக்கும். எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்வீர்கள். வரும் வாடிக்கையாளர்களின் மனம் அறிந்து செயல்பட்டால் வியாபாரம் பெருகும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரலாம். சிலருக்குத் தோல் உபாதைகள் ஏற்படலாம்.

திருவாதிரை –

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். புத்திர பாக்கியம் ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன் பிறப்புகளுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை காண்பீர்கள். உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள், கூட்டமான இடங்களில் பயணிக்கும் போது தங்கள் உடலைப் பற்றிய மேலதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய வாரம். உங்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு கூடிய உழைப்பு, பிறரால் கவனிக்கப்பட்டு, ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுவட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும். பிள்ளைகளின் உடல்நிலை உங்களுக்குக் கவலையை தரலாம், எனவே, ஆறுதலாக அவர் மேல், உங்கள் அன்பைப் பொழிந்து, அது விரைவில் குணமடைந்து எழ ஒர் உந்துதல் தரும். நோய் குணமாக அன்பு ஒரு சக்திமிக்க மருந்து அன்றோ? உங்களால் சுலபமாகச் செய்ய முடியாத காரியங்களை, பிறரைச் செய்யச் சொல்லி வற்புறுத்துவீர்கள். வியாபார விஷயமாக பயணங்கள் நீண்ட நாளைய பொருளாதார நன்மைகளை அளிக்கும். உறவுகளை வெறுக்கும் அளவுக்கு உறவுகளுக்குள் அடிக்கடி கருத்து வேறுபாடுகளால் சண்டைகள் எழலாம்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். மனைவியின் ஒத்துழைப்பால் மகிழ்ச்சி நிலவும். வீட்டில் உள்ளவர்களின் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெறும். தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். கோவில், குளங்களுக்கு தேவையான பணத்தை நன்கொடையாக வழங்கி மகிழ்வீர்கள். பிரபலமானவர்களின் அருகாமையால் ஆறுதலும், நட்பால் முன்னேற்றம் கிடைக்கும். புத்தக வெளியீட்டுத் தொழில்களில் முன்னேற்றம் ஏற்படும்.

பூசம் –

இந்த வாரம் மனமகிழ்ச்சி, பகையை வெல்லும் திறன் ஆகியவை ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். வியாபார நிமித்தமாக தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். மது, மாமிசம் அருந்துபவர்களுக்கு அஜீரண தொல்லைகள் எழலாம்.

ஆயில்யம் –

இந்த வாரம் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். தொழிலில் விஸ்திப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தைவழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, இலாபம் எனும் வெற்றிக் கனியைப் பறிப்பார்கள்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். குடும்பத்திற்காக உங்கள் சந்தோஷங்களை தியாகம் செய்வீர்கள். அன்புக்கு இனியவர்களால் உங்கள் கண்ணீர் துளிகள் துடைக்கப்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். தேவையற்ற, எதிர்பாராத செலவுகள் ஏற்பட பணமுடை ஏற்படும். உங்கள் கடினமான உழைப்பு இன்று, அதற்குரிய சன்மானத்தை அளிக்கும். நீங்கள் உங்கள் காதுகளால் கேட்க விரும்பிய, மக்களின் பாராட்டு உங்களை நீராட்டும்.

பூரம் –

இந்த வாரம் வாக்கு வன்மை ஓங்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். புதிய வியாபார யுக்திகள் அதிக இலாபம் அடைவீர்கள். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் வருவாய் பெருக்கமும் ஏற்படும். உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். பெண்களின் அறிவுத் திறன் கூடும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் சுபகாரிய செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம்உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும் வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும்

அஸ்தம் –

இந்த வாரம் புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவார்கள். உறவு மற்றும் நண்பர்கள் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்.. புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக ஆதாயம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த சுபகாரிய செய்திகள் வருவதோடு செலவுகளும் அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்கள் புகழ் பெறுவர். வாக்குவாதத்தால் குடும்பத்தில் பிரச்சனைகள் எழலாம். அனாவசிய செலவுகளை குறைப்பது நல்லது.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்கு சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும்.

சுவாதி –

இந்த வாரம் உங்களுக்கு ஓரளவு பணவரவு இருக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் சுபகாரிய நிகழ்ச்சிகள், புத்திர பாக்கியம் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். சில நேரங்களில் சுறுசுறுப்பான நிலையும், மனோபயம் நிலவும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

அனுஷம் –

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். மேலும், எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் கிரகிப்பு தன்மையால் தங்கள் கல்வியின் தரத்தை உயர்த்தி கொள்வர். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். தங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும்.

கேட்டை –

இந்த வாரம் ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தி திறன் குறையும் வாய்ப்பு ஏற்படலாம். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள்.

பூராடம் –

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில் பெறுவர். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். புதிய தொழில் வாய்ப்புக்கள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொருத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4- பாதங்கள், திருவோ ணம்- 1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். புதுத்தெம்பும், உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். சிலருக்கு, நண்பர்களும் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு உழைத்தால்தான் அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்கும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவும் ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக

திருவோணம்-

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும். தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் அன்னையின் அன்பும் அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.. சுபசெய்திகளால் மனம் மகிழும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர்

சதயம்-

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுஜன தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும்.

ரேவதி-

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற மிகுந்த அக்கறையுடன் படித்தல் அவசியம். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள்.



திண்டுக்கல் மாவட்டம் பூம்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு மேற்கொண்டு மருத்துவமனையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களை பாராட்டி தேநீர் விருந்தளித்தார்.

# பூம்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்களுக்கு அமைச்சர் தேனீர் விருந்து

திண்டுக்கல், ஜூன் 30-

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். நேற்று முன்தினம் திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் சி.டி. ஸ்கேன், டிஜிட்டல் ஸ்கேனர் ஆகியவற்றை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்த நிலையில் கொடைக்கானலில் 11 புதிய கட்டிட பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களையும் திறந்து வைத்தார். முன்னதாக பூம்பாறை மலைக்கிராமங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவர் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அங்கு சிறப்பாக பணியாற்றிய டாக்டர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த கள பணியாளர்களை பாராட்டி தேனீர் விருந்து அளித்தார்.

அப்போது அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது, தமிழகத்தில் 8713 துணை சுகாதார நிலையங்களிலும், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், ஆஸ்பிரின், கிளோபிடோக்ரல், அட்ரோவாஸ்டாட்டின் ஆகிய 3 மாத்திரைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

பூம்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஜூன் மாதத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் நாய்கடி, பாம்பு கடிக்கு மருந்து இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதில் குணமடைந்தவர்களை தொடர்பு கொண்டு பேசி வருகின்றேன்.

அனைவரும் நன்றாக இருக்கின்றனர். பூம்பாறையில் டாக்டர்கள், செவிலியர்கள் குடியிருப்பு கட்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

முதல்வர் வழிகாட்டுதல் படி ரூ.87 லட்சம் மதிப்பில் தங்கும் விடுதி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதில் 3 செவிலியர்கள் தங்கும் விடுதி, 2 மருத்துவர்கள் குடியிருப்பு ஆகியவை அடங்கும் என தெரிவித்தார்.



திருப்பத்தூர் ஜோலார்பேட்டை ஏலகிரிமலை படகு இல்லத்தில் கோடை விழாவினை முன்னிட்டு மகளிர் திட்டத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அங்காடியை நேற்று அமைச்சர்கள் ஏ.வ.வேலு, இரா.இராஜேந்திரன் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டனர். அருகில் மாவட்ட கலெக்டர் சிவசௌந்திரவல்லி, சி.என்.அண்ணாதுரை எம்.பி. உள்ளனர்.

# ஏலகிரி மலையில் கோடை விழா: 2 தமிழக அமைச்சர்கள் பங்கேற்பு

திருப்பத்தூர், ஜூன் 30-

திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி மலையில் கோடை விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் தமிழக அமைச்சர்கள் எ.வ.வேலு விழா, இரா.இராஜேந்திரன் பங்கேற்றனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஒரே சுற்றுலா தலமாக விளங்கும் ஏலகிரி மலையில் கோடை விழா, ஏலகிரி விழா அரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஆட்சியர் சிவசௌந்திரவல்லி தலைமை வகித்தார்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் உமா மகேஸ்வரி வரவேற்றார்.

பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு விழா பேருரையாற்றினர்.

சுற்றுலா துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் விழாவினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இதில் எம்.பி-க்கள் சி.என். அண்ணாதுரை, டி.எம். கதிர் ஆனந்த், எம்எல்ஏ-க்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்துத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். மருத்துவ படிப்புக்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் நிறைவு

சென்னை, ஜூன் 30-

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். உள்ளிட்ட மருத்துவ படிப்புகளுக்கு விண்ணப்பிக்க நீட்டிக்கப்பட்ட காலஅவகாசம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியுடன் நிறைவடைந்தது.

தமிழகத்தில் 36 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கே.கே.நகர் இ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரியில் 5 ஆயிரத்து 200 எம்.பி.பி.எஸ் இடங்கள் உள்ளன. அதில் 888 இடங்கள் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு வழங்கப்படுகிறது.

இது தவிர தனியார் கல்லூரிகளில் 3 ஆயிரத்து 450 இடங்களும், தனியார் மருத்துவ பல்கலைக்கழகங்களில் 550 இடங்களும் எம்.பி.பி.எஸ் படிப்புகளுக்கு உள்ளன. மொத்தமாக அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் 9 ஆயிரத்து 200 எம்.பி.பி.எஸ் இடங்கள் உள்ளன. பி.டி.எஸ். படிப்பை பொறுத்தவரையில், அரசு மருத்துவக் கல்லூரிகளில் 250 இடங்களும், தனியார் கல்லூரிகளில் ஆயிரத்து 900 இடங்களும் உள்ளன.

இந்த சூழலில், எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்புக்கான மாணவர் சேர்க்கை ஆன்லைன் விண்ணப்பப் பதிவு கடந்த 5-ம் தேதி முதல் தொடங்கி 25-ந்தேதி வரை நடைபெற்றது. மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, மருத்துவப்படிப்புக்கு விண்ணப்பிக்க கூடுதல் கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்த நிலையில், நீட்டிக்கப்பட்ட காலஅவகாசம் நேற்றுடன் (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியுடன் நிறைவடைந்தது.

மாணவர்கள் கடைசி நேர பதற்றத்தை தணிக்க, குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் https://tnmedicalselection.net என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என மருத்துவ மாணவர் சேர்க்கைக்குழு தெரிவித்துள்ளது.

# மேட்டூர் அணை நிரம்பியது: 10 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

சேலம், ஜூன் 30-

மேட்டூர் அணை நிரம்பியதையடுத்து 10 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், கேரள மாநிலம் வயநாட்டிலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் கர்நாடகாவில் உள்ள கபினி, கிருஷ்ண ராஜ சாகர் அணைகள் நிரம்பியதால் 2 அணைகளில் இருந்தும் உபரிநீர் திறக்கப்பட்டுள்ளது. கடந்த 25-ந் தேதி 45 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில் 26-ந் தேதி காலை 60 ஆயிரம் கன அடியாகவும், நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் 85 ஆயிரம் கன அடியாகவும் அதிகரித்தது. இரவு 8 மணி நிலவரப்படி கபினி மற்றும் கே.ஆர்.எஸ். ஆகிய 2 அணைகளிலிருந்தும் விநாடிக்கு 86 ஆயிரத்து 800 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

இதனால் மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் நீர்வரத்து 80 ஆயிரத்து 984 கன அடியில் இருந்து 68 ஆயிரமாக குறைந்தது. மேட்டூர் அணை நீர்மட்டம் அடியாக உள்ளது. முழு கொள்ளளவை 120 அடியை எட்டியதை அடுத்து உபரி நீர் வெளியேறும் 16 கண் மதகிலிருந்து தண்ணீர் வெளியேற்றியது. இதனால், காவிரி கரையோரம் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நீர் பாசனம் பெறும் மாவட்ட கலெக்டர்களுக்கு அணை உபகோட்ட உதவி பொறியாளர் அறிவுறுத்தியுள்ளார்.

சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. மேட்டூர் அணையின் இடது கரையில் உள்ள வெள்ள கட்டுப்பாட்டு அறையில், நீர்வளத்துறை அதிகாரிகள் முகாமிட்டு 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.



உளுந்தூர்பேட்டையில் அ.தி.மு.க. சார்பில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி பேசினார். இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம்.

# கீழடியில் கிடைத்துள்ளது சங்க இலக்கியங்களின் வாழ்வியல் ஆதாரம்

## ஆணையர் உதயசந்திரன் பெருமிதம்

சென்னை, ஜூன் 30-

கீழடியில் கிடைத்துள்ளது சங்க இலக்கியங்களின் வாழ்வியல் ஆதாரம் என்று தொல்லியல் துறை ஆணையர் உதயசந்திரன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

கீழடியில் நகர நாகரிகம் நிலவியது தொல்லியல் சான்றுகள் மூலம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும் அமர்நாத் ராமகிருஷ்ணன் தாக்கல் செய்த கீழடி அறிக்கையில் மத்திய அரசு திருத்தம் கோரியிருந்தது.

கீழடி தொடர்பாக 982 பக்க அகழாய்வு அறிக்கையினை அமர்நாத் ராமகிருஷ்ணன் சமர்பித்த நிலையில், அதனை வெளியிட மத்திய அரசு மறுத்து வருகிறது.

இந்நிலையில், கீழடியில் கிடைத்த மண்டை ஓடுகளை வைத்து, 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் முகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள ஆய்வகத்தில் 3டி முறையில் 2 முகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. 80% அறிவியல், 20% கலையை பயன்படுத்தி இவை வடிவமைக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கீழடியில் கிடைத்துள்ளது சங்க இலக்கியங்களின் வாழ்வியல் ஆதாரம் என்று தொல்லியல் துறை ஆணையர் உதயசந்திரன் தெரிவித்துள்ளார்.

கீழடி குறித்து பேசிய உதயசந்திரன், "தமிழர்களின் வாழ்வியல் ஆதாரமாக இருப்பவை சங்க இலக்கியங்கள். அப்படி சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்திற்குமான ஆதாரமாக கீழடி விளங்குகிறது.

சங்கத் தமிழர்களின் வாழ்வியலை தற்போதைய அறிவியல் தொழில்நுட்ப உதவியுடன் தமிழ்நாடு தொல்லியல் துறை மறுகட்டமைப்பு செய்துள்ளது" என்று கூறியுள்ளார்.

## விடுமுறை தினம் எதிரொலி:

# திருச்செந்தூரில் குவிந்த பக்தர்கள்; நீண்ட வரிசையில் நின்று தரிசனம்

திருச்செந்தூர், ஜூன் 30-

விடுமுறை தினமான நேற்று திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது.

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாக திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் விளங்கி வருகிறது. மேலும் சூரனை வதம் செய்த இடமாகவும், குரு ஸ்தலமாகவும் விளங்கி வருகிறது. இந்த நிலையில், வார விடுமுறையை முன்னிட்டு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திரளான பக்தர்கள் நேற்று திருச்செந்தூருக்கு வருகை தந்துள்ளனர். அவர்கள் அதிகாலை முதலே கடல் மற்றும் நாழிக்கிணறு தீர்த்தத்தில் புனித நீராடினர். இதைத் தொடர்ந்து பொது தரிசன வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.



கோவிலில் அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, 4.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும் நடந்தது. தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடந்து வருகின்றன. ஏராளமான பக்தர்கள் வருகை தந்துள்ளதால், கோவில் வளாகம், வள்ளி குகை, கடற்கரைப் பகுதி, முக்கிய சாலைகள் முழுவதும் பக்தர்களால் நிறைந்து காணப்பட்டது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கடலில் குளித்து, விளையாடி மகிழ்ந்தனர். பக்தர்களின் கூட்டம் அதிகரித்து காணப்பட்ட நிலையில், கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமியின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சிறுபான்மை பிரிவு சார்பில் அதன் மாவட்ட செயலாளர் எம்.ஏ.நாசர் ஏற்பாட்டில் தெற்குவாசல் முகைதீன் ஆண்டவர் தர்காவில் எடப்பாடி பழனிசாமி பல்லாண்டு காலம் வாழவும், மீண்டும் 2026-ல் தமிழக முதலமைச்சராக வரவேண்டியும் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் அ.தி.மு.க.வினர் சிறப்பு தொழுகை செய்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினர். இதில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் உள்ளனர்.